மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

Vol. 125 ஜூலை *2026*

மேக அக்கினி ஸ்தம்பம்

E Vol. 8, Ch. 9, pp. 629-646

மேக அக்கினி ஸ்தம்பம் – ஒரு அடையாளம்

1. எண். 9-ம் அதிகாரத்தின் இரண்டாம் பகுதி (வச. 15-23) மேக அக்கினி ஸ்தம்பத்தைக் குறித்துச் சொல்கிறது. மேக அக்கினி ஸ்தம்பம் வேதாகமத்தில் பலமுறை குறிப்பிடப்படுகிறது. பின்வரும் வசனங்களில் நாம் அதைக் காண்கிறோம்: யாத். 13:21, 22; 14:19, 20, 24; 33:9, 10; 40:34-38; எண். 9:15-23; 10:11, 12, 34; 12:5, 10; 14:14; 16:42; உபா. 1:33; நெகே. 9:12; சங். 99:7; 1கொரி.10:1, 2. அது அடையாளமான ஒன்று என்பதை, மற்ற காரியங்களுடன் பரிசுத்த பவுல் குறிப்பிட்ட காரியங்களும் நிரூபிக்கின்றன. 1கொரி. 10:1, 2 -ம் வசனங்களில் சொல்லப்பட்ட காரியங்களை 6, 11-ம் வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது தெளிவாகும். மேலே குறிப்பிடப்பட்ட பல வசன குறிப்புகள் காண்பிப்பதைப் போல், மேக அக்கினி ஸ்தம்பம் நியாயப்பிரமாண ஏற்பாட்டின் ஒரு பகுதியாக இருப்பதாலும், அது அடையாளமான ஒரு காரியமென்பது நிரூபிக்கப்படுகிறது. அது போலவே, அடையாளமான ஒரு காரியமாகிய ஆசரிப்புக் கூடாரத்தோடு அதற்கு தொடர்பு இருப்பதால், அது வும் அடையாளமான தன்மையுடையதாக இருக்க வேண்டும். சிவந்த சமுத்திரத்திற்கு இஸ்ரயேலர்கள் செய்த பிரயாணம், சிவந்த சமுத்திரத்திலும், சீனாய் மலையண்டையிலும் அவர்களுக்கிருந்த அனுபவங்கள், அதற்குப்பிறகு சிவந்த சமுத்திரத்திலிருந்து கானான் வரை அவர்கள் செய்த பிரயாணம், ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபிப்பது, ஆரோன் மற்றும் மிரியாம் முறுமுறுத்த போது தேவன் கொடுத்த வெளிப்பாடுகள், கோராகு, தாத்தான் மற்றும் அபிராம் முதலியவர்களின் மரணத்தைக் குறித்து இஸ்ரயேலர்கள் முறுமுறுத்தபோது தேவன் கொடுத்த வெளிப்பாடுகள் ஆகிய அடையாளமான சில சம்பவங்களில் மேக அக்கினி ஸ்தம்பமும் வருவதால் அது அடையாளமான ஒன்றாக இருக்க வேண்டும். ஆகையால் அது வரவிருக்கும் மேன்மையான காரியங்களுக்கும் ஒரு அடையாளமாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை.





மேக அக்கினி ஸ்தம்பமானது காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவியை அடையாளப்படுத்துகிறது

2. மேக அக்கினி ஸ்தம்பம் எதற்கு அடையாளமாக இருக்கிறதென்று வேதாகமம் எங்கும் நேரடியாகக் குறிப்பிடவில்லையென்றாலும், அது வரும் சூழ்நிலைகளையும், அது செய்த காரியங்களையும், எந்த காரியங்களின் சம்பந்தமாக அது உபயோகிக்கப்பட்டது என்பதையும் நாம் கருத்தில் கொள்ளும்போது அது பின்வரும் காரியத்தைத் தெளிவாக நிரூபிக்கிறது: தேவனுடைய ஜனங்களோடு தேவன் இருப்பதைக் காண்பிக்கிற காரியங்களாகிய காலத்திற்குரிய சத்தியம்

தூது நிரல்

1. மேக அக்கினி ஸ்தம்பம்.....1
2. பாரமடைந்திருப்பதால் வரும் ஆபத்து.....15
3. அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.....17
4. அவள் வேதாகமத்தை மிக அதிகமாக அறிந்திருந்தாள்.....18
5. அவர் நடந்துபோகையில் நான் அவரைச் சந்தித்திருந்தால்.....18

மற்றும் அதின் ஆவியை மேக அக்கினி ஸ்தம்பம் அடையாளப்படுத்துகிறது. அது இஸ்ரயேலர்களை எகிப்திலிருந்து கானான் வரையுள்ள பாதை முழுவதிலும் வழி நடத்தின போது, காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவி நமக்குச் செய்கிற அதே காரியத்தை அவர்களுக்கும் செய்தது. காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவி நம்மை உருவகமான எகிப்திலிருந்து உருவகமான கானான் வரையுள்ள பாதை முழுவதிலும் வழி நடத்துகின்றன (நெகே. 9:12; யாத். 40:36-38; எண். 9:15-23; 10:11, 12, 34; உபா. 1:33). உண்மையான ஞானஸ்நானத்தின் பகுதிகளில் ஒன்றை மேக அக்கினி ஸ்தம்பமும் (தேவனுக்கென்று பிழைத்திருப்பது), மற்றொன்றைச் சமுத்திரமும் (சுயத்துக்கும் உலகத்துக்கும் மரித்திருப்பது) அடையாளப்படுத்துகின்றன (1கொரி.10:1,2). மேக அக்கினி ஸ்தம்பம் சத்தியம் மற்றும் அதின் ஆவியை அடையாளப்படுத்துகிறது என்று இதுவும் நிரூபிக்கிறது. தேவன் தம்முடைய ஜனங்களிடம் செயல்படுவதற்கும், அவர்களிடம் பேசுவதற்கும் அதை உபயோகித்ததால் (யாத். 14:24; 33:9, 10; எண். 9:17-20, 23; 10:11-13; 12:5; 14:14; உபா. 1:33; சங். 99:7), அது சத்தியம் மற்றும் அதின் ஆவியை அடையாளப்படுத்துகிறது என்பதை நிரூபிக்கிறது. இவ்வாறாக அதின் சரியான, நிஜநிறைவேறுதலான அர்த்தத்தை வேதாகமம் நேரடியாகக் குறிப்பிடவில்லையென்றாலும், அது உபயோகிக்கப்பட்ட விதம், அதின் சூழ்நிலைகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கருதும்போது, அது காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவியை அடையாளப் படுத்துகிறது என்பது தெளிவாக நிரூபிக்கப்படுகிறது.

3. தேவன் தமது ஜனத்தை இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்திலிருந்து (உருவகமான எகிப்து), ராஜ்யத்திற்கு (உருவகமான கானான்) வழி நடத்துவதற்குக் காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவியை உபயோகிக்கிறார் என்பது வெளிப்படையாயிருக்கிறது. அநேக வேத வசனங்களும் இதைத் தெளிவாகக் காண்பிக்கின்றன சத்தியத்தினாலே அவர்கள் ஜீவனை அடைகிறார்கள் (சங். 119:93; மத். 4:4; யோவா. 6:63, 68), சத்தியம் அவர்களுடைய கால்களுக்குத் தீபமாகவும் பாதைக்கு வெளிச்சமாகவும் இருந்து அவர்களை வழிநடத்துகிறது (சங். 119:105; 2 பேது. 1:18, 19; 1 யோவா. 1:7; ஏசா. 30:21; மீகா 2:7). தேவனுடைய ஜனங்கள் செல்வதற்குச் சத்தியத்தின் வழியைத் தவிர வேறெந்த உண்மையான வழியும் இல்லை. மற்ற எதிரிடையான வழிகளெல்லாம் மரணத்திற்குக் கொண்டு செல்லும் (ஏசா. 8:20; மீகா. 3:6).

4. அதுபோலவே சத்தியத்தின் ஆவியும் தேவனுடைய ஜனங்களை வழி நடத்துகிறது என்று வேதாகமம் போதிக்கிறது. ஆவியே ஜீவனை அளிக்கிறது (யோவா. 6:63; ரோம. 8:1-4, 11-14; 2 கொரி. 3:6; கலா. 6:8) ஆவியே தேவனுடைய ஜனங்களை வழி நடத்துகிறது (யோவா. 14:17; 15:26; 16:13; 1 யோவா. 4:6). மேலும் தேவனுடைய ஜனங்கள் நடப்பதற்குச் சத்தியத்தின் ஆவியின் பாதையைத் தவிர, வேறெந்த உண்மையான பாதையுமில்லை. மற்றெல்லா எதிரிடையான பாதைகளும் மரணத்திற்குக் கொண்டு செல்லும் (மத். 26:41; ரோம. 8:13, 14; கலா. 5:16-21). சபை வகுப்பாரின் மனுஷீகமானது, உண்மையான ஞானஸ்நானத்தில் மரணத்திற்குள் மூழ்க்கப்பட்டிருக்கையில், அவர்களுடைய புது சிருஷ்டியானது சத்தியம் மற்றும் அதின் ஆவிக்குள் மூழ்கப்பட்டிருந்தது [மத். 3:15-17; 28:19 (நாமத்திலே என்பது தவறான மொழிபெயர்ப்பாகும்; "நாமத்திற்குள்" என்று இருக்க வேண்டும் (நாமம் என்பது "மனம் மற்றும் இருதயத்தை" அதாவது "மன இயல்பைக்" குறிக்கிறது)]; ரோம. 6:3-11; 1 கொரி. 10:1, 2; 12:13; கலா. 3:27; கொலோ. 2:12].

5. சத்தியம் மற்றும் அதின் ஆவியின் மூலம் தேவன் நம்மிடம் பேசுகிறார் என்று நாம் அறிகிறோம் (எபி. 1:1; 4:12; 13:7; ரோம. 10:8, 14-17; சங். 68:11; யோவா. 14:24; 17:8; தீத்து 1:3; 1 பேது. 1:11, 12, 25; 2 பேது. 3:2; வெளி. 3:8; யோவா. 14:17; 15:26; 16:11; நெகே. 9:20; ஏசா. 61:1; அப். 2:4; 1 கொரி. 2:10; 1 யோவா. 5:6; வெளி. 2:7, 11, 29; 3:6, 13, 22; 14:13; 22:17) இவ்வாறாக மேக அக்கினி ஸ்தம்பத்தின் உபயோகங்களின் நிஜநிறைவேறுதலைப் பல சொல்லர்த்தமான வேத வசனங்கள் நமக்கு அளிக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். நம்முடைய அனுபவங்களும் இந்த கருத்துகளுக்குக் கூடுதலான சான்றை அளிக்கின்றன. ஆகையால் சுவிசேஷ யுக தேவனுடைய ஜனங்களை, நிஜநிறைவேறுதலான எகிப்திலிருந்து நிஜநிறைவேறுதலான கானான் வரை, வழி நடத்தும் அலுவலில், காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவி, மேக அக்கினி ஸ்தம்பத்தினால் அடையாளப் படுத்தப்படுகின்றன என்று நாம் முடிவு செய்வது தகுதியான ஒன்றாகும்.

6. எண்.9:15 <u>வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப் பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபோது, வாசஸ் தலத்தின்மேல் அக்கினிமயமான ஒரு தோற்றம் உண்டா யிற்று; அது விடியற்காலமட்டும் இருந்தது.</u> வாசஸ்தலம் ஸ்தாபனஞ் செய்யப்பட்ட நாளிலே மேகம் அதை மூடிற்று என்று நாம் எண். 9:15-ம் வசனத்தில் வாசிக்கிறோம். யாத். 40:33,34 வசனங்களிலும் இது குறிப்பிடப் பட்டிருக்கிறது. வாசஸ்தலம் என்பது, தேவன் வாசம் பண்ணும் இடமாகவும், தேவன் தமது ஜனங்களைச் சந்திக்கும் இடமாகவும், தேவன் தமது ஜனங்களை ஆசீர்வதிக்கிற இடமாகவும் இருக்கிற யெஷுஆ மற்றும் சபையை அடையாளப்படுத்துகிறது (வெளி. 21:3-5). பொதுவாகச் சொன்னால் வனாந்தரத்திலுள்ள வாசஸ்தலமானது (ஆசரிப்புக் கூடாரம்) கிறிஸ்து வகுப்பார் பாடனுபவித்துக் கொண்டிருந்த சுவிசேஷ யுக அனுபவங்களில் அவர்களை அடையாளப்படுத்துகிறது. சாலொமோனின் தேவாலயமோ மகிமையான மில்லினிய யுக அனுபவங்களில் அவர்களை அடையாளப்படுத்துகிறது. இருந்தாலும் சில நேரங்களில் அவர்களுடைய மில்லினிய யுக செயல்பாடுகளைக் குறிக்க வாசஸ்தலம் என்ற வார்த்தையும் (வெளி. 21:3-5), அவர்களுடைய சுவிசேஷ யுக சூழ்நிலைகளைக் குறிக்க ஆலயம் என்ற வார்த்தையும் (1 கொரி. 3:16, 17; 6:19; எபே. 2:20-22; 1 பேது. 2:5; வெளி. 11:19; 15:6, 8; 16:1) உபயோகிக்கப்படுவதை நாம் வேதாகமத்தில் காண்கிறோம்.

7. எண். 9:15-ம் வசனத்தில் சொல்லப்பட்ட வாசஸ்தலத்தின் நிஜநிறைவேறுதல் சுவிசேஷ யுகத்தின் கிறிஸ்து வகுப்பார் ஆவர். ஆகையால் வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளென்பது சுவிசேஷ யுகத்தை அடையாளப் படுத்துகிறது. வாசஸ்தலத்தை ஸ்தாபனஞ் செய்வதென்பது, தேவனுடைய வாசஸ்தலமாகவும், தேவன் தமது ஜனங்களைச் சந்திக்கும் இடமாகவும், தேவன் தமது ஜனங்களை ஆசீர்வதிக்கிற இடமாகவும் கிறிஸ்து வகுப்பாரைச் சுவிசேஷ யுகத்தில் அபிவிருத்தி செய்வதை அடையாளப்படுத்துகிறது. இந்த நிஜநிறைவேறுதலான வாசஸ்தலம் நம்முடைய கர்த்தரின் பிரதிஷ்டைக்கு முன் உருவாக்கப்படவில்லை. அவர் பிரதிஷ்டை

செய்த போது, நிஜநிறைவேறுதலான பிராகாரமும், தாமிர பலிபீடமும், தாமிர தொட்டியும், முதலாம் திரையும், முதலாம் திரையின் கீழ் குனிந்து செல்கிற பிரதான ஆசாரியரும் உருவாக்கப்பட்டன. அவர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட போது, நிஜநிறைவேறுதலான பரிசுத் தமும், அதின் குத்துவிளக்கும், அதின் சமுகத்தப்ப மேஜை யும், அதின் பொற்பீடமும் உருவாக்கப்பட்டன. அவர் மரித்தபோது நிஜநிறைவேறுதலான இரண்டாம் திரை உருவாக்கப்பட்டது. அவர் உயிர்த்தெழுந்த போது நிஜ நிறைவேறுதலான சாட்சிப்பெட்டியானது அதின் கிருபா சனத்துடனும், கேருபீன்களுடனும், ஷெக்கினா ஒளி யினுடனும் இணைக்கப்பட்டது. இவ்வாறாகக் கிறிஸ்து வைப் பொருத்தவரை நிஜநிறைவேறுதலான மகா பரிசுத்தம் உருவாக்கப்பட்டது.

8. பெந்தெகொஸ்தே அன்று, சபை வகுப் பாரின் நியாயமாக்கப்பட்ட மனுஷீகம் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, சபை வகுப்பாரை அடையாளப் படுத்தும் விதத்தில் நிஜநிறைவேறுதலான பிராகாரமும், தாமிர பலிபீடமும், முதலாம் திரையும் உருவாக்கப் பட்டன. அதே நேரத்தில், ஆவியினால் ஜெநிப்பித்தலின் மூலம் சபையின் புது சிருஷ்டிகளின் முதல் அங்கத்தினர் கள் இருத்தலுக்குள் வந்தபோது, சபையை அடையாளப் படுத்தும் விதத்தில் நிஜநிறைவேறுதலான பரிசுத்தமும், அதின் குத்துவிளக்கும், அதின் மேஜையும், அதின் பொற்பீடமும் உருவாக்கப்பட்டன. அது முதல், சுவிசேஷ யுகம் முழுவதும் கிறிஸ்து வகுப்பாரின் மற்ற அங்கத் தினர்கள் வாசஸ்தல நிலைக்குள் வந்து கொண்டிருக்கை யில், நிஜநிறைவேறுதலான வாசஸ்தலம் ஸ்தாபனஞ் செய்யப்பட்டுக் கொண்டு வந்தது. சபை வகுப்பாரைப் பொருத்தவரையிலும் நிஜநிறைவேறுதலான பிராகாரம் மற்றும் பரிசுத்தத்தின் ஸ்தாபித்தல் *1914*-ல் நிறை வடைந்தது. அதற்குப் பிறகு எவர்களும் கூட்டப்பட வில்லை.

9. சுவிசேஷ யுகம் முழுவதும் விசுவாச உண்மைத்துவமுள்ள தனி நபர்கள் அவர்களுடைய பலியை மரணபரியந்தமும் நிறைவேற்றிக் கொண்டிருக் கையில், நிஜநிறைவேறுதலான இரண்டாம் திரை ஸ்தாபிக் கப்பட்டுக் கொண்டு வந்தது. சபையின் கடைசி அங்கத்தினர் மரித்தபோது நிஜநிறைவேறுதலான இரண் டாம் திரை முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டது. *1878* நிசான் *16*-ம் தேதி முதல், சபை வகுப்பாரை அடையாளப் படுத்தும் விதத்தில் நிஜநிறைவேறுதலான மகா பரிசுத்த மும், உடன்படிக்கை பெட்டியும் உருவாக்கப்படத் தொடங்கினது. கிறிஸ்து வகுப்பாரின் கடைசி அங்கத் தினர் திரைக்கப்பால் சென்றபோது அவைகளும் நிறை வடைந்தன. இந்த புது சிருஷ்டிப்பின் முழு செயல் முறையையும் வாசஸ்தலத்தின் ஸ்தாபனம் அடையாளப் படுத்துகிறது *(எண். 9:15)*. இந்த வேலைக்குரிய காலம் சுவிசேஷ யுகமாகும். ஆகையால் இவ்வசனத்தில் சொல்லப்பட்ட நாள் என்பது முழு சுவிசேஷ யுகத்தையும் அடையாளப்படுத்துகிறது *(யோயே. 2:29; யோவா. 17:21-24; 16:23, 26; 1 கொரி. 1:30; எபே. 2:10)*.

10. வாசஸ்தலத்தை மூடுகிற மேக அக்கினி ஸ்தம்பமானது கிறிஸ்து வகுப்பாரின்மேல் அமர்ந்திருந்த காலத்திற்கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும் அர்த்தப்படுத்தினது. சுவிசேஷ யுகம் முழுவதும் தேவன் கிறிஸ்து வகுப்பாரைக் காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களாகவும், அதின் பாதுகாவலர்களாகவும் ஆக்கினார் என்பதை இது அர்த்தப்படுத்துகிறது. நிச்சயமாகப் பல வேத வசனங்கள் இந்த கருத்தை நிரூபிக்கின்றன. அவைகளில் சில குறிப் பான வசனங்களை எடுத்துரைக்கிறோம்: சங். *25:14; 97:11; 119:66, 99, 100, 130;* நீதி. *3:32;* ஏசா. *30:18-21;* ஆமோஸ் *3:7;* மத். *11:25; 13:11, 16, 17; 2* கொரி. *3:13, 14;* ரோம. *16:25*-ம் வசனத்தை கொலோ. *1:26, 27*-ம் வசனங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும். இது கிறிஸ்து வகுப்பாரின் விசேஷித்த உரிமையாக இருந்தது. ஏனென்றால் சுவிசேஷ யுகத்தில் காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவி கிறிஸ்து வகுப்பாரைத் தவிர மற்ற எவர்களிடமும் இல்லாதிருந்தது. மேகமானது பாளயத்தையோ, பாளயத் திற்குப் புறம்பான இடத்தையோ மூடாமல், வாச ஸ்தலத்தை மட்டுமே மூடினது என்பதின் மூலம் இது அடையாளப்படுத்தப்படுகிறது.

11. இவ்வுலகத்தின் மேன்மையானவர்களுக்கும், ஞானிகளுக்கும், வல்லவர்களுக்கும் இது அபத்தமாகத் தோன்றக்கூடும். ஆனால் சுவிசேஷ யுகத்தில் ஊற்றப்பட்ட காலத்திற்குரிய சத்தியம் அல்லது ஜெநிப்பித்தலின் பரிசுத்த ஆவி என்னவாக இருந்தாலும், அவைகள் சபை யில் மட்டுமே இருந்தன. மேலும் அவைகளைச் சபையின் ஊழியத்தின் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடிய தாக இருந்தது. சபை வகுப்பார் இவைகளின் பாதுகாவலர் களாக இருந்தார்கள் என்பதில் இது அர்த்தப்படுத்துகிறது *(1* ராஜா. *17:1)*. வாசஸ்தலத்தின் மேல் தங்கி இருந்த மேக அக்கினி ஸ்தம்பம் இதையும் இதற்குக் கூடுதலான மற்ற பல காரியங்களையும் அடையாளப்படுத்தினது. உலகத் தார் இதை ஏளனம் செய்து, இகழ்ந்தால் அவ்வாறு செய்யட்டும். ஆனால் கிறிஸ்து வகுப்பார் காலத்திற்கேற்ற தேவனுடைய சத்தியம் மற்றும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறவர்களாகவும், பாதுகாவலர்களாகவும் இருந்தார்கள் என்ற உண்மையை இது எவ்விதத்திலும் மாற்றுவதில்லை. இது சபை வகுப்பாரின் சிலாக்கியமாக இருந்தது. உலகத்திலுள்ள மிகப்பெரியவர்களும், மிக வல்லவர்களும், மிகுந்த ஞானிகளும் பெற்றுக் கொள்கிற அல்லது மேன்மை பாராட்டுகிறதை விட மிகப்பெரிய சிலாக்கியம் சபை வகுப்பாருக்குரியதாக இருந்தது. இக்காலத்திலும் எல்லா சிலாக்கியங்களையும் விட மிகப் பெரிய சிலாக்கியமாகிய காலத்திற்குரிய சத்தியத்தையும் அதின் ஆவியையும் பெற்றுக்கொண்ட நாம் தேவனுக்கு நன்றி கூறுவோமாக. இப்போதுள்ள பொல்லாத உலகத் தில் மிக சிலாக்கியம் பெற்றவர்களின் அனுகூலங்கள் என்னவாக இருந்தாலும் நாம் அவைகளைக் குறித்துப் பொறாமை படாதிருப்போமாக.

12. அந்த ஸ்தம்பம் பகலில் மேகமும், இரவில் அக்கினி தோற்றமும் உடையதாக இருந்தது. இதுவும் ஒரு அடையாளமான காரியமாக இருந்தது. சுவிசேஷ யுகத்தில் இரண்டு உருவகமான பகல்களும், இரண்டு உருவகமான இரவுகளும் இருந்தன. வேதாகமத்தில் பரூஷியா காலம் பகல் என்றும், எபிப்பெனி காலம் இரவு என்றும் பலமுறை அழைக்கப்படுகின்றன *(சங். 91:5,6; மத். 20:1-8)*. அவைகள் இரண்டும் சேர்ந்து ஒரு நாள் என்றழைக்கப் படுகின்றன. *24* மணி நேரங்கொண்ட ஒரு நாளின் வெளிச்சமான பகுதி பரூஷியா காலத்தையும், இருளான பகுதி எபிப்பெனி காலத்தையும் அடையாளப்படுத்து கின்றன *(1*கொரி.*3:13;* எபே.*6:13)*. ஏசாயா *21*-ல் ஜாமக் காரன் உபத்திரவ காலமாகிய எபிப்பெனியை இரவு என்று அழைக்கிறார். ஆகையால் அதற்கு முன்னிருந்த காலமாகிய பரூஷியா ஒரு பகலாக இருந்திருக்க வேண்டும் *(ஏசா. 21:11, 12)*. யோவா. *9:4*-ம் வசனத்தில், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் (இவ் வசனத்தின் சூழ்நிலை அமைப்பு காண்பிப்பதைப் போல்

இந்த கிரியை அறுவடை வேலையைக் குறிக்கிறது) எபிப்பெனி காலமாகும். ஆகையால் அதற்கு முன்னிருந்த காலமாகிய பரூஷியா பகல் என்று அழைக்கப்படுகிறது.

13. யோவா. 9:4-ம் வசனத்திற்கு மற்றொரு பிரயோகமும் இருக்கிறது. கர்த்தராகிய யெஷூஆ கிரியை செய்து கொண்டிருந்த பகலானது யூத யுக அறுவடையின் அறுப்பு நாளாக இருந்தது. இணையான அறுவடை காலங்களும் இதையே அர்த்தப்படுத்துகின்றன. யூத யுக அறுவடை என்னும் பகலை தொடர்ந்து ஒரு இராக்காலம் வந்தது. அதில் அறுவடை வேலை செய்யக் கூடாததாக இருந்தது. அந்த இரவு கிபி 69 அக்டோபரில் தொடங்கி கி.பி. 1874 அக்டோபர் வரை நீடித்தது. இந்த இரு காலங்கள் நமக்குச் சுவிசேஷ யுகத்தின் மற்றொரு பகலையும் மற்றொரு இரவையும் கொடுக்கின்றன: யூத யுக அறுவடை பகலாகவும், அதற்கும் சுவிசேஷ யுக அறுவடைக்கும் இடைப்பட்ட காலம் இரவாகவும் இருந்தன.

14. இந்த இரு அறுவடை காலங்கள் ஒவ்வொன்றும் ஒரு பகலாகவும், அதைத் தொடர்ந்து அதற்கு அடுத்துவரும் பகல்கள் வரும் வரையுள்ள காலங்கள் ஒவ்வொன்றும் ஒரு இரவாகவும் அழைக்கப்படுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இயற்கையில் பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் பிரகாசிக்கின்றன என்ற உண்மை இதற்கு அடிப்படையாயிருக்கிறது (ஆதி.1:16). வேதாகமத்தில் சூரியன் என்பது மற்ற காரியங்களுடன், புதிய ஏற்பாட்டை அடையாளப்படுத்தவும், சந்திரன் என்பது பழைய ஏற்பாட்டை அடையாளப்படுத்தவும் உபயோகிக்கப்படுகின்றன (ஏசா. 60:19; 30:26; மத். 24:29; அப். 2:20; வெளி. 6:12; 8:12; 12:1). ஆகையால் உருவகமான சூரியனாகிய புதிய ஏற்பாடு பிரதானமாக வெளிச்சத்தைக் கொடுக்கும் காலங்கள் பகல்களாக இருக்கும். மேலும் உருவகமான சந்திரனாகிய பழைய ஏற்பாடு பிரதானமாகப் பிரகாசித்து, வெளிச்சத்தைக் கொடுக்கும் காலங்கள் உருவகமான இரவுகளாக இருக்கும்.

15. யூத யுக அறுவடை காலத்தில் புதிய ஏற்பாட்டு சத்தியங்கள் பிரகாசித்தன என்பது வெளிப்படையாய் இருக்கிறது. அக்காலத்தில் கொடுக்கப்பட்ட போதனைகளும், புதிய ஏற்பாடு அக்காலத்தில் உருவானது என்ற உண்மையும் இதை நிரூபிக்கின்றன. ஆகையால் யூத யுக அறுவடையானது, ஒரு இரவிலிருந்து தனிப்பட்ட ஒரு பகலாக இருந்தது. அக்காலத்தில் பழைய ஏற்பாடும் ஓரளவிற்கு வெளிச்சத்தைப் பிரகாசித்தது என்பது உண்மை. ஆனால் அக்காலத்தில் பிரகாசித்த புதிய ஏற்பாட்டு வெளிச்சத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது மிகக்குறைவாக மட்டுமே இருந்தது. பகலில் ஒரு பகுதியில் சந்திரன் ஓரளவிற்குக் காணப்பட்டுப் பிரகாசிக்கும் என்ற உண்மை இதைச் சித்தரிக்கிறது.

16. நம்முடைய பாஸ்டர் ரஸலின் எழுத்துக்களாகிய பரூஷியா போதனைகளைக் கவனிக்கும் போதும் இதே உண்மை வெளிப்படுகிறது. அவருடைய எழுத்துக்களில் பழைய ஏற்பாட்டு வசன விளக்கங்கள் சிறிதளவில், சுருக்கமாக இருந்தாலும், அவருடைய எழுத்துக்களின் பெரும்பகுதி புதிய ஏற்பாட்டின் போதனைகளின் விளக்கங்களாக இருந்தது. பெரியன் விளக்கங்களின் பழைய ஏற்பாட்டு வசனங்களின் விளக்கங்களின் பக்கங்களைப் புதிய ஏற்பாட்டு வசன விளக்கங்களின் பக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த கருத்து உண்மையானது என்று உடனடியாக நிரூபிக்கப்படும். அதுவும் புதிய ஏற்பாட்டின் அளவானது பழைய ஏற்பாட்டின் அளவில் நான்கில் ஒரு பங்காக மட்டுமே இருப்பதை நினைவு கூரும்போது, இது இன்னும் தெளிவாகிறது.

17. யூத யுக அறுவடைக்குப் பிறகு எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு வசனங்கள் யோவான் அப்போஸ்தலரின் எழுத்துக்களாக இருந்தன. சூரியன் அடிவானத்திற்குக் கீழே சென்ற பிறகும் கூட கொஞ்ச நேரத்திற்கு வெளிச்சத்தை அளிக்கும் என்ற உண்மை இதை உருவகமாகச் சித்தரிக்கிறது. அதற்குப்பிறகு ஒரு உருவகமான இரவு தொடங்கினது. அது சுவிசேஷ யுக அறுவடை தொடங்கும் வரை நீடித்தது. சரித்திர ரீதியான உண்மைகளும் இந்த உருவகத்திற்குச் சான்றளிக்கின்றன. ஏனென்றால் இடைப்பட்ட காலத்தின் ஐந்து சபைகளின் நட்சத்திரங்கள் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தை விட பழைய ஏற்பாட்டின் வெளிச்சத்தைப் பிரகாசித்தன. எடுத்துக்காட்டாக பெர்கமு சபை நட்சத்திரத்தின் பிரதான அதிபதியாகிய ஏரியஸ் (Arius) , தியத்தீரா சபை நட்சத்திரத்தின் பிரதான அதிபதியாகிய டூரின் ஊரைச் சேர்ந்த கிளாடியஸ் (Claudius of Turin), சர்தை சபை நட்சத்திரத்தின் பிரதான அதிபதியாகிய மார்சிகிளியோ (Marsiglio), பிலதெல்பியா சபை நட்சத்திரத்தின் பிரதான அதிபதியாகிய ஜான்வெசல் (John Wessel)- இவர்கள் எல்லாரும் பிரதானமாகப் பழைய ஏற்பாட்டு கருத்துக்களையே எழுதினார்கள்.

18. இதற்குரிய காரணம் வெளிப்படையாக இருக்கிறது: கிறிஸ்து கொடுத்த போதனைகள், நடைமுறைகள் மற்றும் அமைப்புக்குப் போலியான காரியங்களைப் போப்பு மார்க்க அமைப்பு பெரிதளவில் மெய் தேவனற்ற ஜனங்களின் காரியங்களிலிருந்து எடுத்துக் கொண்டது. அதற்குக் கூடுதலாகப் பழைய ஏற்பாட்டுப் போதனைகளுக்குப் போலியான போதனைகளையும் அதிகளவில் எடுத்துக் கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் போதனைகள் என்று சொல்லி ஜனங்களை வஞ்சிப்பதற்குப் போப்பு மார்க்கம் போலியாகப் பயன்படுத்தின பழைய ஏற்பாட்டு வசனங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் உரிய காலத்திற்கேற்ற உண்மையான விளக்கங்களைக் கொடுப்பதற்கு இந்த நட்சத்திரங்களின் பிரதான அதிபதிகளும் மற்றவர்களும் பழைய ஏற்பாட்டு வசனங்களை விளக்க கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

19. ஆனால் இரு அறுவடைகளுக்கு இடையிலுள்ள காலத்தில் உருவகமான சந்திரன் முழுமையாகப் பிரகாசிக்கவில்லை. இந்த காலத்தின் சகோதரர்கள் விளக்கின வேத வசனங்கள் மற்றும் நிகழ்வுகளின் பெரும் பான்மையானவைகளை அவர்கள் ஓரளவிற்கு மட்டுமே புரிந்து கொண்டார்கள். டூரின் ஊரைச் சேர்ந்த கிளாடியஸ் (Claudius of Turin), பீட்டர் எபேலார்டு (Peter Abelard), மார்சிகிளியோ (Marsiglio), வைகிளிஃப் (Wycliffe), வெசல் (Wessel)), லூத்தர் (Luther), கிரான்மர் (Cranmer) முதலியவர்களின் எழுத்துக்களைப் பார்க்கும் போது இதை நாம் காண்கிறோம். இருந்தாலும் பழைய ஏற்பாட்டு வசனங்களைத் தவறாக உபயோகித்து போப்பு மார்க்க அமைப்பு உருவாக்கின போலியான காரியங்களை வெளியரங்கமாக்கி, மறுப்பதற்குப் போதுமான அளவிற்கு அவர்கள் அவைகளைப் புரிந்து கொண்டார்கள். மேலும் அதைச் செய்யும்போது அக்காலத்திற்குரிய தெய்வீக நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள்.

20. மறுமலர்ச்சியின் காலம் வந்தபோது (சர்தை மற்றும் பிலதெல்பியா சபைகளின் காலங்கள்), இந்த இரவு முடிவுக்கு வந்து கொண்டிருக்கையில் அதின் விடியற்காலம் நீண்டதாக இருந்தது. கோடைகாலத்தின் விடியற்காலை நீண்டதாக இருப்பதற்கு ஒப்பாக, பரூஷியா என்னும் பகலுக்கு முன்பு வந்த இந்த விடியற்

காலையும் நீண்டதாக இருந்தது. இந்த உருவகமான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது சர்தை மற்றும் பிலதெல்பியா சபைகளுக்கு முன்பு இருந்த மூன்று சபைகளின் காலத்தில் உபயோகிக்கப்பட்டதை விட இந்த இரு காலங்களில் புதிய ஏற்பாட்டு வசனங்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்டன. இன்னும் விசேஷமாகப் பெர்கமு மற்றும் தியத்தீரா சபைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது உண்மையாயிருக்கிறது. சர்தை மற்றும் பிலதெல்பியா காலங்கள் முன்னேறிக் கொண்டிருக்கையில் புதிய ஏற்பாட்டின் இந்த உபயோகமும் தொடர்ந்து அதிகரித்தது. இறுதியாக வெஸ்லி *(Wesley)*, ஸ்டோன் *(Stone)*, மில்லர் *(Miller)* ஆகியவர்களின் காலத்தில், அவர்களுடைய எழுத்துக்களிலும் போதனைகளிலும் புதிய ஏற்பாடு அதிகமதிகமாக முன் நிலைக்கு வந்தது.

21. பரூஷியா என்னும் பகலைத் தொடர்ந்து வந்த எபிப்பெனி என்னும் இரவில் உருவகமான சந்திரன் முழுமையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதை நாம் காண்கிறோம். பழைய ஏற்பாட்டின் நிகழ்வுகளும், வேத வசனங்களும் இன்னும் தெளிவாக விளக்கப்பட்டுக் கொண்டு வருவதற்கும், அவைகள் சம்பந்தப்பட்ட தப்பறைகள் நிராகரிக்கப்படுவதற்கும், இதுவே காரணமாய் இருக்கிறது *(ரோம. 15:4; ஏசா. 30:25, 26)*. அது மட்டுமல்ல நாம் இந்த எபிப்பெனி என்னும் இரவின் முடிவுக்கு வந்து மில்லினிய யுக *(Basileia - பெஸிலியா)* பகலின் விடியற்காலைக்குள் செல்லும்போது, இந்த உருவகத்திற்கு இணக்கமாகப், புதிய ஏற்பாட்டின் காரியங்கள் திரும்பப் படிப்படியாக முன் நிலைக்கு வரும்.

22. இவ்வாறாக நாம் இப்போது சுவிசேஷ யுகத்தின் இரவுகளில் ஒன்றில் இருக்கிறோம் ஆகையால் அதில் சந்திரனாகிய பழைய ஏற்பாடு பிரதானமாகப் பிரகாசிப்பதை நாம் இயல்பாகவே எதிர்பார்க்க வேண்டும். இக்காலத்தில் சூரியனாகிய புதிய ஏற்பாடு பிரதானமாகப் பிரகாசிப்பதை எதிர்பார்ப்பது நியாயமான தல்ல. ஏனென்றால் சூரியன் பிரகாசிப்பதற்கு ஏற்றக் காலம் பகலாகவும், சந்திரன் பிரகாசிப்பதற்கு ஏற்றக் காலம் இரவாகவும் இருக்கின்றன. எபிப்பெனி காலத்தின் சகோதரர்கள் பழைய ஏற்பாட்டை அதிகமாக உபயோகித்ததினிமித்தம், விசேஷமாக அடையாளங்களை உபயோகித்ததின் நிமித்தம் அக்காலத்தின் லேவி வகுப்பார்கள் அவர்களைப் பலமுறை விமர்சித்தார்கள். "எங்களுக்குப் புதிய ஏற்பாட்டு கருத்துக்களைக் கொடுங்கள்; எங்களுக்கு பழைய ஏற்பாட்டு அடையாளங்கள் வேண்டாம்; புதிய ஏற்பாட்டு சத்தியங்களே வேண்டும்!" என்று கூறினார்கள். அதற்கு பாஸ்டர் ஜான்சன் இவ்வாறாக நியாயமாகப் பதிலளிக்கிறார்: உருவகமான சூரியனின் கதிர்களாக இருக்கிற புதிய ஏற்பாட்டின் கருத்துக்கள் அதற்குரிய காலமாகிய பரூஷியா என்னும் பகலில் வந்தன. நாம் இப்போது இரவில் இருக்கிறோம். இக்காலத்திற்கேற்ற வெளிச்சம் சந்திரனின் வெளிச்சமாகும். நம்முடைய பாஸ்டர் ரஸல் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன சத்தியத்தைப் பெரிதளவில் கொடுத்திருப்பதால், இக்காலத்திற்குரிய வெளிச்சம் இன்னும் விசேஷமாக உருவகமான சந்திரனின் அடையாளங்களைப் பற்றிய சத்தியங்களாகும். ஆனால் இக்காலத்திலும் உருவகமான சூரியனின் வெளிச்சத்தை விரும்பி, உருவகமான சந்திரனின் வெளிச்சத்தை விரும்பாதவர்களுக்கு நாங்கள் சொல்கிறதாவது, உருவகமான சூரியன் அஸ்தமித்த பிறகு அதின் வெளிச்சத்தைப் பெற நாடுகிறவர்களின் முயற்சிகள் விருதாவாகி போகும் என்பதாகும். அஸ்தமித்த சொல்லர்த்தமான சூரியனை ஒரு கயிற்றினால் இழுத்து, இரவை பகலாக மாற்ற நினைக்கும் ஒரு மனிதனின் முயற்சிகளுக்கு ஒப்பாயிருக்கும். சொல்லர்த்தமான சூரியனையோ உருவகமான சூரியனையோ நாம் இவ்வாறு கையாள முடியாது என்பது வெளிப்படையாயிருக்கிறது!

23. எபிப்பெனி என்ற இந்த இரவில் முழுமையாகப் பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கிற சந்திரனின் வெளிச்சத்தை விரும்பாமல், இப்போதும் உருவகமான சூரியன் பிரகாசிக்க வேண்டுமென்று வற்புறுத்துபவர்கள், பகலிலே வெயிலினாலும், இரவிலே நிலவினாலும் சேதப்படுத்தப்படாதவர்களில் இருக்க மாட்டார்கள் *(சங். 121:6)*. அவர்கள் அவைகளில் ஒன்றினாலோ அல்லது இரண்டினாலோ சேதப்படுத்தப்பட்டார்கள் என்று அவர்களுடைய போக்கு காண்பிக்கிறது. உருவகமான சந்திரனின் முழுமையான வெளிச்சம் இரவை பிரகாசிப்பிக்கும் போது, அந்த சந்திரனைக் கண்டு குரைப்பவர்களாக இருக்கிறார்கள். சொல்லர்த்தமான ஓநாய்களும் நாய்களும் சொல்லர்த்தமான சந்திரனின் பிரகாசமான ஒளியைக் கண்டு குரைப்பதைப் போல் உருவகமான ஓநாய்களும் *(மதகுருத்துவ பற்றுடையவர்கள் - clericalists)* உருவகமான நாய்களும் *(மதப்பிரிவு பற்றுடையவர்கள் - sectarians)* அதையே செய்கிறார்கள்.

24. நம்மைப் பொருத்தவரை, நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிற உருவகம் காண்பிப்பதைப் போல் பின் வரும் உண்மைகளை ஏற்றுக் கொள்வோமாக: இந்த எபிப்பெனி இரவில் பிரகாசிக்கிற சந்திரனின் முழு வெளிச்சத்தைக் காட்டிலும் பரூஷியா பகலின் சூரிய வெளிச்சம் மிக சிறந்ததாகவும், மிகத் தெளிவாகவும், மிக விரும்பத்தக்கதாகவும் இருந்ததென்று அங்கீகரிக்கும் அதே நேரத்தில், நாம் இப்போது இரவு காலத்திலிருப்பதால், முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற காலத்திற் கேற்ற சத்தியம் உருவகமான சூரியனிடமிருந்து பிரதானமாக வராமல், உருவகமான சந்திரனிடமிருந்து பிரதானமாக வருமென்று அறிந்து அதை ஏற்றுக் கொள்வோமாக. மேகங்களினால் மறைக்கப்படாத சந்திரனின் முழுமையான வெளிச்சம் நம்முடைய பாதையைப் பிரகாசிப்பித்துக் கொண்டிருப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றி கூறுவோமாக. ஏனென்றால் இருளில் மறைந்துள்ள ஆபத்துக்களைத் தவிர்த்து நீதிமான்களுக்குரிய பிரகாசமான பாதையில் நடக்க அது நமக்குத் திராணி அளிக்கிறது. ஆகையால் அன்பானவர்களே இந்த எபிப்பெனி இரவில் கர்த்தர் நமக்குக் கொடுக்க சித்தமாயிருக்கிற இவ்வகையான வெளிச்சத்திற்காக மகிழ்ச்சியுடன் நன்றி கூறுவோமாக. பிடிவாதமான பிள்ளைகளைப் போல் செயல்பட்டு இரவு நேரத்தில் பகலின் வெளிச்சத்திற் காகப் புலம்பாமல் இருப்போமாக. மறுநாள் வரும் வரை இந்த இரவு நீடிக்கும்.நாம் இந்த இரவிலே இருக்க வேண்டும். ஆகையால் இந்த தெளிவான, முழுமையான சந்திரனின் வெளிச்சத்தை அசட்டை செய்யாதிருப்போமாக.

25. சிலர் இவ்வாறு கேள்வி கேட்கக் கூடும்: நீங்கள் மேக ஸ்தம்பத்திற்கும் அக்கினி ஸ்தம்பத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை விளக்க முயன்று, அதற்குப் பதிலாகப் பகலில் பிரகாசிக்கிற உருவகமான சூரியனைக் குறித்தும், இரவில் பிரகாசிக்கிற உருவகமான சந்திரனைக் குறித்தும் விளக்கினீர்கள். நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிற கருத்துக்கு இது சம்பந்தமில்லாதிருக்கிறது அல்லவா? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம். ஒரு பொதுவான விதத்தில் உருவகமான சூரியனானது

நிஜநிறைவேறுதலான மேக ஸ்தம்பம் குறிக்கும் அதே காரியத்தையும், உருவகமான சந்திரனானது அக்கினி ஸ்தம்பம் குறிக்கும் அதே காரியத்தையும் அர்த்தப்படுத்துவதால், நாங்கள் அதை இங்கே விளக்கினோம். இயற்கையான சூரியனும் சந்திரனும் மனிதன் செல்கிற பாதையையும், அவர்கள் தங்கும் இடங்களையும் அவர்களுக்கு தெளிவாக்குவதைப் போலவே, மாம்ச இஸ்ரயேலர்களின் பிரயாணங்களிலும் பாளயம் இறங்குதல்களிலும் சொல்லர்த்தமான மேக அக்கினி ஸ்தம்பமும் அதையே செய்தது. ஆகையால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் உருவகமான பிரயாணங்கள் மற்றும் பாளயம் இறங்குதல்களிலும், நிஜநிறைவேறுதலான மேக ஸ்தம்பம் உருவகமான சூரியன் செய்த காரியத்தையும், நிஜநிறைவேறுதலான அக்கினி ஸ்தம்பம் உருவகமான சந்திரன் செய்த காரியத்தையும் அவர்களுக்குச் செய்தன. அதினாலே இந்த இரு உருவகங்களுக்கு இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. வெவ்வேறான இந்த உருவகங்கள் ஒரே காரியங்களின் வெவ்வேறான செயல்பாடுகளை விளக்குகின்றன: தேவ வார்த்தை மற்றும் தேவ ஆவி பிரகாசிப்பிக்கவும் (சூரியன் மற்றும் சந்திரன்), வழி நடத்தவும் (மேக அக்கினி ஸ்தம்பம்) செய்கின்றன. ஆகையால் மேக அக்கினி ஸ்தம்பத்தின் நிஜநிறைவேறுதலை விளக்குவதற்கு உருவகமான சூரியனைக் குறித்தும் சந்திரனைக் குறித்தும் ஆராய்வது தகுந்ததாகும்.

26. மேக ஸ்தம்பமானது புதிய ஏற்பாட்டிலுள்ள காலத்திற்கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும், அக்கினி ஸ்தம்பமானது பழைய ஏற்பாட்டிலுள்ள காலத்திற்கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும் அடையாளப்படுத்துவதால், மேக அக்கினி ஸ்தம்பமானது இஸ்ரயேலர்களோடு தேவன் இருக்கிறார் என்பதற்குரிய வெளிப்பாடாக இருந்தது என்று பாஸ்டர் ரஸல் கொடுத்த விளக்கம் சரியானதாகும் *(Z'07, 216,217).* ஏனென்றால் காலத்திற்கேற்ற சத்தியம் மற்றும் அதின் ஆவி என்பவைகளே, தேவனுடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்களோடு அவர் இருக்கிறார் என்பதற்குரிய மிகவும் தெளிவான நிரூபணமாக இருக்கிறது.

27. இவ்வாறாக நாம் பின்வரும் காரியங்களைப் புரிந்து கொள்கிறோம்: *(1)* இஸ்ரயேலர்களோடு மேக ஸ்தம்பம் இருந்த பகல் காலத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட சுவிசேஷ யுக பகல் காலங்கள், யூத யுக அறுவடை மற்றும் சுவிசேஷ யுக அறுவடையின் அறுப்பு காலங்களாக இருக்கின்றன. பகலில் தோன்றின மேக ஸ்தம்பமானது இந்த இரு அறுவடை காலங்களுக்குரிய புதிய ஏற்பாட்டு சத்தியத்தையும் அதின் ஆவியையும் அடையாளப்படுத்துகிறது. *(2)* பகல் காலங்களைத் தொடர்ந்து வந்து, அதற்கும் அடுத்த பகலுக்கும் இடையிலிருந்த இரவு காலங்களில் அக்கினி ஸ்தம்பம் இஸ்ரயேலர்களோடு இருந்தது. இந்த இரவு காலங்கள் இரு அறுவடைகளுக்கு இடையிலுள்ள காலத்தையும் *(சுவிசேஷ யுக இடைப்பட்ட காலம்), பரூஷியா* மற்றும் மில்லினிய யுகத்திற்கு இடைப்பட்ட காலத்தையும் *(எபிப்பெனி)* அடையாளப்படுத்துகின்றன. இக்காலங்களில் அவர்களோடிருந்த அக்கினி ஸ்தம்பமானது அந்த காலத்திற்கேற்ற பழைய ஏற்பாட்டு சத்தியத்தையும் அதின் ஆவியையும் குறிக்கிறது.

28. தேவனுடைய திட்டத்தில் இன்னும் வரவிருக்கிற பகலும் இரவும் இருக்கின்றன. அந்தப் பகல் மில்லினிய *(Basileia – பெஸிலியா)* யுகமாகும் *(சகரி. 14:4-9; ஏசா. 25:9-day).* அக்காலத்தில் மேக ஸ்தம்பம் *(புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணக்கமான புதிய ஏற்பாட்டின் போதனைகள் மற்றும் அதின் ஆவி)* மில்லினிய யுக இஸ்ரயேலர்களைப் பரிசுத்த பெரும் பாதையில், சொற்ப காலத்தில் தொடங்கவிருக்கிற இறுதியான பரீட்சை வரை வழி நடத்தும். ஏத்தாமிலிருந்து சிவந்த சமுத்திரம் வரை இஸ்ரயேலர்கள் செய்த பிரயாணம் இதை அடையாளப்படுத்துகிறது *(யாத். 13:20-22).* மூன்றாம் இரவு சொற்ப காலமாகும். சிவந்த சமுத்திரத்தில் இஸ்ரயேலர்கள் கழித்த இரவு இதை அடையாளப்படுத்துகிறது *(யாத். 14:20, 24, 27).* அக்காலத்திலுள்ள அக்கினி ஸ்தம்பமானது, சொற்ப காலத்தில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களின் தேவைகளுக்கேற்றவாறு கொடுக்கப்படும் பழைய ஏற்பாட்டின் சத்தியங்கள் மற்றும் அதின் ஆவியாக இருக்கும். சொற்ப காலத்தின் இரவுக்குப் பிறகு பகல் என்றென்றைக்கும் நீடிக்கும். ஏனென்றால் "அங்கே இராக்காலமிராது" *(வெளி. 22:5).*

29. எண்.9:16 <u>இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும், இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக்கொண்டிருந்தது.</u> *15-ம்* வசனத்தில் சொல்லப்பட்ட அறிக்கையை வலியுறுத்துவதற்கு, அது இங்கே திரும்பக் கூறப்படுவது மட்டுமல்ல, மேக அக்கினி ஸ்தம்பம் நித்தமும் இருக்கும் என்ற கூடுதலான கருத்தும் கூடுதலாகச் சொல்லப்படுகிறது. மாம்ச இஸ்ரயேலர்களின் தலைவராகவும், வழிகாட்டியாகவும் இருக்கிற தேவனுடைய விசுவாச உண்மைத்துவத்தை இது காண்பிக்கிறது. மேலும் நிஜநிறைவேறுதலில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தலைவராகவும் வழிகாட்டியாகவும் இருக்கிற தேவனுடைய விசுவாச உண்மைத்துவத்தை இது போதிக்கிறது. பிரியமானவர்களே இது நம்முடைய கடந்த கால அனுபவங்களில் உண்மை என்று நிச்சயமாக நிரூபிக்கப்பட்டது. உண்மையான இஸ்ரயேலர்கள் அனைவரும் நிஜநிறைவேறுதலான கானானைப் பாதுகாப்பாகச் சென்றடையும் வரை இது எப்போதுமே உண்மையானதென்று நிரூபிக்கப்படும்.

30. யூத யுக அறுவடை காலத்திலும், அதற்குப் பிறகு சுவிசேஷ யுக அறுவடை வரை இருந்த இடைப்பட்ட காலத்திலும், பரூஷியாவிலும் இப்போது எபிப்பெனியிலும் கூட, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை வழி நடத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையாயிருந்த காலத்திற்கேற்ற சத்தியமும் அதின் ஆவியும் எப்போதுமே இருந்தன. அன்பான கர்த்தர் தம்முடைய விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களுக்குத் தேவையாயிருந்த காலத்திற்கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும் எப்போதுமே கொடுத்தார். விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களுக்கு அதிகமாகவும், ஓரளவிற்கு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களுக்கு ஓரளவிற்கும் அவர் இருளாக இருந்தாலும், தமக்குச் சொந்தமானவர்களை அவர் ஒருபோதும் கைவிடவில்லை. அவருடைய பரிசுத்த பர்வதமாகிய ராஜ்யத்தைச் சென்றடையும்வரை அவர்களுக்கு வழிக்காட்டுவதற்கும், அவர்களைக் கண்காணிப்பதற்கும் போதுமான காலத்திற்கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும் எப்போதுமே கொடுத்தார். மேலும் இந்த விஷயத்தில் இனிமேலும் அவர் அவர்களைக் கைவிடமாட்டார். ஏனென்றால் "இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும், இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக்கொண்டிருந்தது."

31. அன்பானவர்களே நாம் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக நீடித்திருக்கும் வரை, தேவனுடைய உண்மையான ஜனங்களின் மத்தியில் நிஜநிறைவேறுதலான மேக அக்கினி ஸ்தம்பம் இருப்பதை நாம் எப்

போதுமே எதிர்பார்க்கலாம். அது அவர்களின் மேல் தங்கி இருப்பதை நாம் எப்போதுமே கண்டு கொள்வோம். ஏனென்றால் அது அவ்வாறே இருக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டமாயிருக்கிறது.அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள சபை வகுப்பார், காலத்திற்கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும் பெற்றுக் கொள்கிற வர்களாகவும் பாதுகாவலர்களாகவும் இருக்கிறார்கள். நம்முடைய தேவனும் பிதாவுமாகிய யாவேயின் ஒரு போதும் தவறாத விசுவாச உண்மைத்துவம் இதற்கு உத்தரவாதமாக இருக்கிறது! "கர்த்தருடைய பரிசுத்தவான் களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய பரிசுத்தத் தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்" (சங். 30:4). அவருடைய விசுவாச உண்மைத்துவமானது பர்வதங் களை விட அதிக உறுதியானதாகவும், மலைகளை விட அதிக நிலையானதாகவும் இருக்கிறது. அது ஒருபோதும் சோர்வடையவோ, தடுமாறவோ, தாமதிக்கவோ செய் யாது: "இப்படி நித்தமும் இருந்தது."

32. ஆனால் இந்த மேக அக்கினி ஸ்தம்பத்தை எல்லா இஸ்ரயேலர்களும் ஒரே அளவிற்கு தெளிவாகக் காணவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருக் கின்றன: *(1)* அதற்கும் ஒரு நபருக்கும் இடைப்பட்ட தூரம் அதிகரிக்கும்போது அதின் தெளிவு மங்கிப் போகும், *(2)* கண் பார்வை குறையும்போது அதின் தெளிவு மங்க லாகும். அதற்கு மிக நெருக்கமாக வாசம் பண்ணினவர் களும், வாசஸ்தலத்தில் பணிவிடை செய்தவர்களுமான ஆசாரியர்கள் அதை மிக தெளிவாகக் கண்டார்கள். அடுத்த நிலையில் அதற்கு நெருக்கமாக வாசம் பண்ணின வர்களும், பிராகாரத்தில் பணிவிடை செய்தவர்களுமான லேவியர்கள் அடுத்த நிலையில் அதைத் தெளிவாகக் கண்டார்கள். பாளயத்தில் வாசம் பண்ணினவர்கள் அதைக் குறைந்த தெளிவுடன் பார்த்தார்கள். அது போலவே, அன்பான சகோதரர்களே, சுவிசேஷ யுகத்தில் நிஜநிறைவேறுதலான ஆசாரியக் கூட்டமாக இருந்த புது சிருஷ்டிகள், நிஜநிறைவேறுதலான லேவியர்களாக இருந்த விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்களை விட, அதிக தெளிவாக நிஜநிறைவேறுதலான மேக அக் கினி ஸ்தம்பத்தைக் கண்டார்கள். நிஜநிறைவேறுதலான லேவியர்கள் நிஜநிறைவேறுதலான பாளயக்காரர்களை விட அதிக தெளிவாக அதைக் கண்டார்கள். சுவிசேஷ யுகத்தில் நிஜநிறைவேறுதலான பாளயத்திலிருந்தவர்கள், தேவனோடு ஓரளவிற்கு ஐக்கியங்கொள்ள நாடினாலும், பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் வரையிலும் கூட முன்னேறாதவர்களாக இருந்தார்கள். அல்லது முன்பு பரீட்சார்த்த ரீதியாக நியாயமாக்கப்பட்டிருந்தாலும், பின் வாங்கிப் போய், பிராகாரத்திலிருந்து பாளயத்திற்கு வந்த வர்களாக இருந்தார்கள். இவ்வாறாக இந்த வித்தியாசங் களுக்குரிய ஒரு காரணமானது, நிஜநிறைவேறுதலான ஸ்தம்பத்திலிருந்து அவர்கள் நிற்கும் நிலைகளுக்கிடை யிலுள்ள உருவகமான தூரங்கள் வெவ்வேறாக இருந்தன என்பதாகும்.

33. ஆனால் ஒரே வகுப்பிலுள்ளவர்களுக்கு இடையிலும் கூட உருவகமான. மேக அக்கினி ஸ்தம்பத்தைக் காண்பதில் வித்தியாசங்கள் இருக்கின்றன. இவ்வாறாக சில ஆசாரியர்கள் மற்ற ஆசாரியர்களை விட அதை இன்னும் தெளிவாகக் கண்டார்கள். அவர்கள் மற்ற ஆசாரியர்களை விட அதிக கூர்மையான ஆவிக்குரிய பார்வை திறனுடையவர்களாக இருந்ததினாலும், அவர் களை விட அதிகமாகப் படித்து ஆராய்வதால் பரிசுத்த ஆவியின் ஆதரவை அதிகமாகப் பெற்றுக் கொண்ட தினாலும் இந்த வித்தியாசம் காணப்படுகிறது. இதற் கொத்த காரணத்தினாலே, நியாயமாக்கப்பட்டவர்களில் சிலர் அதே நிலையிலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் அதிக தெளிவாக நிஜநிறைவேறுதலான ஸ்தம்பத்தின் நியாயமாகுதலின் அம்சங்களைப் புரிந்துகொள்கிறார்கள். இதற்கொத்த காரணத்தினாலே நிஜநிறைவேறுதலான பாளயத்திலுள்ள சிலர் ஒழுக்க ரீதியான சத்தியங்களை யும், நியாயமாகுதலைப் பற்றிய அடிப்படை சத்தியங் களையும், மற்ற பாளயக்காரர்களை விட இன்னும் அதிக தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். பாளயக்காரர்களில் சிலர் கிட்டத்தட்ட முழுமையாக உருவகமான குருடர் களாக இருந்தார்கள்.

34. இவ்வாறாக நிஜநிறைவேறுதலான மேக அக்கினி ஸ்தம்பத்தோடு நடந்து, அதற்கு நெருங்கி வாசம் பண்ணுபவர்கள் அவ்வாறு செய்யாதவர்களை விட அதிக மாக அதின் வெளிச்சத்தையும் ஆவியையும் பெற்றுக் கொண்டு அதிகமாக ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஆகை யால் நம்மால் இயன்றவரை அதிகமாக நாம் முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கிற சத்தியம் மற்றும் அதின் ஆவியோடு நடந்து, அதற்கு மிக நெருக்கமாக வாசம் பண்ணுவது விரும்பத்தக்க ஒரு காரியமாகும். நாம் அவ்வாறு செய்யும்போது, நாம் நம்முடைய கானான் சுதந்தரத்தையும், நித்திய வீட்டையும் சென்றடைந்து, என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டு இளைப்பாறும் வரை அந்த ஸ்தம்பத்தின் வெளிச்சமும் வழி நடத்துதலும் நமக்கு இன்னும் தெளிவாகவும் இன்னும் ஆசீர்வாத மாகவும் வழிக்காட்டும்.

35. எண்.9:17 <u>மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம்பண்ணு வார்கள்; மேகம் தங்குமிடத்தில் இஸ்ரயேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள்</u>. எண். 9:17-ம் வசனமானது, 18-23 வரையிலுள்ள வசனங்களில் விவரிக்கப்படுகிற காரியங் களைச் சுருக்கமாக கூறுகிறது. மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரேல் புத்திரர் பிரயாணம் பண்ணினார்கள் என்றும், அது தங்கும் இடத்தில் அவர் கள் பாளயமிறங்கினார்கள் என்றும் இவ்வசனம் காண்பிக்கிறது. இதுவும் அடையாளமான ஒரு காரிய மாகும். மேக அக்கினி ஸ்தம்பம் நகர துவங்குவதும், தொடர்ந்து நகர்வதும், நகர நின்று விடுவதும் எதை அடையாளப்படுத்துகிறது? இந்த உருவகங்களும் சபை வகுப்பாரின் அனுபவங்களும் இதற்குரிய பதிலை நமக்குக் கொடுக்கின்றன. ஸ்தம்பம் என்பது காலத்திற் கேற்ற சத்தியத்தையும் அதின் ஆவியையும் அடையாளப் படுத்துவதால், அது நகரத் தொடங்குவதென்பது அந்த சத்தியமும் அதின் ஆவியும் வெளிப்படத் துவங்குவதைக் குறிக்கும். ஸ்தம்பம் இவ்வாறு நகரத் தொடங்கி முன் னேறுவதினால், அவ்வித முன்னேற்றமானது, முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கிற வெளிச்சமும் அதின் ஆவியும் மேலும் வெளிப்படுவதை அர்த்தப்படுத்துகிறது. மேலும் அது நகர நின்று விடுவதென்பது அந்த சத்தியமும் அதின் ஆவியும் நிறைவடைந்திருப்பதைப் பொருத்தமாக அடையாளப்படுத்தும்.

36. இவ்வாறாக ஸ்தம்பம் கானானை நோக்கி ஒரு முறை முன்னேறுவதென்பது ஒரு குறிப்பான கருத்து அல்லது சில கருத்துக்கள் சம்பந்தப்பட்ட சத்தியம் மற்றும் அதின் ஆவி முன்னேற்றமடைவதை அர்த்தப்படுத் தும். நிச்சயமாக இந்த செயல்முறைக்கு ஒரு துவக்கமும் ஒரு முடிவும் இருக்கும். இது ஸ்தம்பம் நகரத் தொடங்கு வதின் மூலமும், நகர நின்று விடுவதின் மூலமும் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த செயல்களின் மூலம் மிகவும் முக்கியமான ஒரு வேதாகம அடிப்படை

கொள்கை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப் படுகிறது. இது வேதாகமத்தில் "தகுதியான காலத்திலே கொடுக்கப்படும் படியாகவும் (படி – grain measure – தானி யத்தை அளக்க உபயோகிக்கப்படும் பாத்திரம்" (லூக். 12:42). "அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரிய பிரகாச மாகவும்" (நீதி. 4:18). "ஏற்ற காலங்களில் விளங்கி வரும் சாட்சியாகவும்" (1தீமோ. 2:6) வெவ்வேறாகக் குறிப்பிடப் படுகிறது. சத்தியத்தின் முன்னேற்றமடையும் தன்மை இந்த வார்த்தைகளின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏனென்றால் இது வேதாகம சத்தியத்தின் விசேஷித்த தன்மையாகும். அது ஏற்ற காலங்களில் வெளிப்படுத்தப் பட்டு முன்னேற்றமடையும். ஒவ்வொரு காலத்திலும் தேவனுடைய ஜனங்களின் பல்வேறு தேவைகள், அனு பவங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதத்தில் அமைக்கப்படுவதற்கு முன்னேற்றமடையும். இதிலும் மற்ற காரியங்களிலும் வேதாகமமானது மனுஷரால் உருவாக்கப்பட்ட மதப்பிரிவு கொள்கைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கிறது. இந்த மதப்பிரிவு கொள்கைகள், ஆடும் மர குதிரையைப் போல், ஒரே இடத்தில் மேலும் கீழும் நகர்ந்தாலும் எவ்விதத்திலும் முன்னேறாது. இவ்வாறாக ஒருவன் தன் சிந்தனையின் வழிக்காட்டியாக வேதாகமத்தைப் பாதுகாப்பாகச் சார்ந் திருக்கலாம். மதப்பிரிவு கொள்கைகளை ஒருபோதும் சார்ந்திருக்க முடியாது.

37. ஒருவர் இவ்வாறு கூறி இருக்கிறார்: வேதாக மம் ஒரு கடலுக்கு ஒப்பானது- ஒரு குழந்தை நடக்கக் கூடிய அளவிற்கு ஆழமில்லாத சில இடங்களைக் கொண்டதாகவும் ஒரு யானை நீந்தக் கூடிய அளவிற்கு ஆழமுள்ள சில இடங்களைக் கொண்டதாகவும் இருக் கும். தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய அபிவிருத் தியின் எல்லா நிலைகளுக்கும், ஒவ்வொரு தேவைக்கும், ஒவ்வொரு அனுபவத்திற்கும், ஒவ்வொரு சூழ்நிலைக் கும் வேதாகமம் பொருந்துவதாக இருக்கிறது என்பதே, தேவனே அதின் காரணர் என்பதற்குரிய மிக உறுதியான நிரூபணங்களில் ஒன்றாக இருக்கிறது. பலவகையான சூழ்நிலைகளில் நடைமுறைப்படுத்தப்படக் கூடியதாக வும், அதே நேரத்தில் இவ்வளவு உண்மையானதாகவும் இருக்கிற வேதாகமத்தை தேவன் ஒருவரைத் தவிர மற்ற எவராலும் ஏற்படுத்தியிருக்க முடியாது. தேவனுடைய ஜனங்களுக்கு இவ்விதமான ஒரு வழிக்காட்டியையும் கண்காணியையும் ஏற்படுத்துவதற்கு நடைமுறை ரீதியான சர்வ ஞானம் தேவையாயிருந்தது. ஆகையால் வேதாகமம் தெய்வீக வெளிப்பாடாகவும், தேவ ஆவியின் அகத் தூண்டுதலினால் எழுதப்பட்டதாயும் இருக்கிறது. இது கற்பனையான ஒன்றல்ல. தேவனுடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்கள் அனைவரின் அனுபவங் கள் இதற்குச் சாட்சி கூறுகின்றன. மேலும் இதற்குத் தேவன் தாமே தம்முடைய வெளிப்பாட்டில் சாட்சி கூறு கிறார்.

38. தேவனுடைய ஜனங்களின் பல்வேறு தேவை களுக்கும், அனுபவங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ற விதத்தில் முன்னேற்றமடைகிற இந்தப் பண்பு, வேதாகம சத்தியத்திற்கு இருப்பதற்குக் காரணமென்னவென்றால், தமது ஜனங்களின் தேவைகளையும், அனுபவங்களையும், சூழ்நிலைகளையும் முன்னறிந்த தேவன், அவர்கள் ஒவ் வொருவருக்கும் பொருந்தும் ஏதேனும் ஒன்றை வேதாகமத்தில் வைத்தார். மேலும் அந்த தேவைகளும், அனுபவங்களும், சூழ்நிலைகளும் உண்டாகும் போது, அந்த காரியங்களை வேதாகமத்திலிருந்து எடுத்து, தேவ னுடைய ஜனங்களின் பார்வையில் வைக்கத் தேவன் யெஷூஆவுக்குக் கட்டளையிடுவார். ஏனென்றால் யெஷூஆவே வேதாகமத்தை விளக்குபவராகவும் அதின் திட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரியாகவும் இருக் கிறார் (வெளி 5: 2,5, 7, 12).

39. இதற்குக் கூடுதலாக வேதாகம அடையாளங் களின் மூலமும் தீர்க்கதரிசனங்களின் மூலமும் அது தேவனுடைய ஜனங்களின் தீர்க்கதரிசன சரித்திரத்தைக் கொடுக்கும்படி தேவன் வேதாகமத்தை அமைத்திருக் கிறார். அதாவது தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடு சம்பந்தப்பட்ட அவர்களுடைய செயல்களையும், அந்த வெளிப்பாட்டின் ஒரு பகுதியாயிருக்கிற அவர்களுடைய செயல்களையும் மட்டுமே தேவன் வேதாகம அடை யாளங்களிலும் தீர்க்கதரிசனங்களிலும் வைத்திருக்கிறார். அவர் இதை நமக்கு ஆமோஸ் 3:7-ம் வசனத்தில் சொல்கிறார். "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்." இதின் பொருள் இவ்வாறாயிருக்கிறது: வேதாகமத்தை எழுதினவர்களின் மூலம் தேவன் முன்கூட்டியே வெளிப் படுத்தினவைகளைத் தவிர, வேறெந்த காரியமும் தேவனு டைய திட்டத்தின் (அவருடைய ரகசியம்) வெளிப்பாடு சம்பந்தமாக நிகழ்வதில்லை. இதற்கு எதிர்மாறாகத், தேவனுடைய திட்டம் மற்றும் அதின் வெளிப்பாட்டோடு தொடர்பில்லாத எதையும் வேதாகமத்தை எழுதினவர்கள் எழுதவில்லை.

40. இவ்வாறாக வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒரு வெளிப்பாடாயிருக்கிறது. தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்களே அந்தத் திட்டத்தை முன்னேறச் செய்யும் பிரதான செயலியக்கிகளாக இருக்கிறார்கள். ஆகையால் வேதாகம போதனைகள், அடையாளங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்களில் தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்களின் செயல்கள் இவ்வளவு அதிகமாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. இவ்வாறாகத் தேவனுடைய திட்டத் தின் வெளிப்பாடு சம்பந்தமாகத் தேவனுடைய சுவிசேஷ யுக ஜனங்களின் எல்லா செய்கைகளையும், தேவை களையும், அனுபவங்களையும், சூழ்நிலைகளையும் தேவன் முன்னறிந்து, எதிர்பார்த்து வேதாகமத்தில் குறிப் பிட்டிருக்கிறார். தேவனே இந்த காரியங்களை வேதாகமத் தில் வைத்திருக்கிறார். ஆகையால் தேவனுடைய ஜனங் களின் செயல்கள், தேவைகள், அனுபவங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கும் பொருந்தும் காரியங்களை அது அவர் களுக்கு வெளிப்படுத்தும். இவ்வாறு செய்யும்போது வேதாகமமானது தகுதியான காலத்திலே படிக் (ஆகாரம்) கொடுக்கிறதாகவும் அதிகமதிகமாக பிரகாசிக்கிற சூரிய பிரகாசமாகவும் ஏற்ற காலங்களில் விளங்குகிற சாட்சி யாகவும் நிரூபிக்கப்படுகிறது.

41. தேவ வார்த்தையின் இந்த முன்னேற்ற மடையும் தன்மை தான், மேக அக்கினி ஸ்தம்பம் முன்னேறத் தொடங்கி முடிவு பரியந்தம் அதிகமதிகமாக முன்னேறுவதின் நிஜநிறைவேறுதலாக இருக்கிறது. மேலும் ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டிய எல்லா காரியங்களையும் கொடுத்து முடிந்த பிறகு, அதைப் பற்றிய புதிதான கருத்துக்கள் இனி கொடுக்கப் படுவதில்லை என்பது அந்த ஸ்தம்பம் நகர நின்று விடுவதின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. மனுஷ ருடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இந்த முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற வெளிப்பாடு மெதுவாக நடைபெறும் ஒரு செயலாக இருக்கும். இது ஏசா.28:9, 10-ம் வசனங்களில் நன்றாக விவரிக்கப் படுகிறது: "அவர் யாருக்கு அறிவைப் (ஆழமான காரியங்

களை) போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை (ஆழமான காரியங்களை) உணர்த்துவார்? பால் மறந்தவர்களுக்கும், முலைமறக்கப் பண்ணப்பட்டவர்களுக்குமே [கிறிஸ்து வின் மூல உபதேசங்களுக்கு மேலாக முன்னேற்றமடைந்த வர்கள் (எபி.5:12-6:2). அதற்குப்பிறகு, இவர்களுக்குத் தேவன் கொஞ்சம் கொஞ்சமாக மற்றும் படிப்படியாக மட்டுமே போதிப்பார் என்று காண்பிப்பதற்கு இவ்வாறு கூறுகிறார்] கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனை யின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாண மும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்ச மும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்."

42. தேவன் காரியங்களை இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாகவும் படிப்படியாகவும் வெளிப்படுத்தும் போது, தெய்வீகத் திட்டத்தின் படியே, அது தகுதியற்ற வர்களையும் விசுவாச உண்மைத்துவமில்லாதவர்களை யும் இடறல் அடையச் செய்து (ஏசா. 28:11-13), விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் தேவ அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களைப் பரீட்சிக்கும் [வச.16 - "விசுவாசிக்கிறவன் (விசுவாச உண்மைத்துவமுள்ளவன்) பதறான் (அவசரமாகச் செயல்பட மாட்டான்)", அதாவது தேவ வார்த்தை தாமதமாக வெளிப்படுவதாகத் தோன் றும் போது விசுவாச உண்மைத்துவமில்லாதவர்கள் செய் வதைப் போல், கர்த்தர் செயல்படுவதை விட விரைவாகத் துணிந்து, பொறுமையில்லாமல் தாங்களே காரியங்களை அவசரமாகக் கையாள மாட்டார்கள். அவர்கள் அவ்வாறு அவசரமாகச் செயல்பட்டால், அது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும். விசுவாச உண்மைத்துவமில்லாதவர்கள் மற்றும் தகுதியற்றவர்களின் காரியத்தில் எப்போதுமே அவ்வாறு நடக்கும்]. பிரியமானவர்களே, தேவ வார்த்தை யின் இந்த சிறப்பியல்பைக் கருத்தில் கொண்டு, எல்லா காரியங்களிலும் கர்த்தருடைய ஏற்ற காலம் வருவதற் காகப் பொறுமையோடு காத்திருப்போமாக. ஏனென்றால் "அமரிக்கையும் நம்பிக்கையுமே நம்முடைய பெலனா யிருக்கும்" (ஏசா. 30:15). இவ்வாறு செய்வதே நமக்கு நன்மையாகும்.

43. எண். 9:17-ம் வசனத்தில் குறிப்பிடப்பட் டிருக்கிற ஸ்தம்பத்தின் செயல்பாடுகள் அடையாளமான வைகளாக இருப்பது மட்டுமல்ல, அவ்வசனத்தில் குறிப் பிடப்பட்ட இஸ்ரயேலர்களின் செயல்களும் அடையாள மானவைகளாக இருக்கின்றன. இந்த செயல்கள் இரு வகையானவைகளாக இருக்கின்றன: (1) பிரயாணம் பண்ணுவது, (2) பாளயமிறங்குவது. மாம்ச இஸ்ரயேலர் கள் எகிப்திலிருந்து கானானுக்குச் செய்த பிரயாண மானது ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் இப்போதிருக்கிற பொல்லாத உலகத்திலிருந்து ராஜ்யத்திற்குச் செய்யும் பிரயாணத்தை அடையாளப்படுத்துகின்றது என்று (எபி. 3:1–4:11; 1 கொரி. 10:1-14) நாம் நினைவு கூரும்போது, இந்த இரு காரியங்களும் எதைக் குறிக்கின்றன என்பது தெளிவாகும். கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு நடை பயணமாக வும், ஒரு பிரயாணமாகவும், கிறிஸ்தவர்கள் இங்கே வாசம் பண்ணுவதற்கு நிலையான நகரம் இல்லாமல், இன்னும் சிறப்பான மற்றொரு நகரத்திற்குப் பிரயாணம் செய்கிற அந்நியர்களாகவும் பரதேசிகளாகவும் வேதாக மத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம் (1 பேது. 2:11; எபி. 13:13, 14; சங். 107:4-7; ஏசா. 30:21; எரே. 6:16; மீகா 6:8; ரோம. 6:4; 8:1; 2 கொரி. 5:7; 1 யோவா. 2:6).

44. மாம்ச இஸ்ரயேலர்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குச் செய்த ஒவ்வொரு முன்னேற்றத் தின் மூலமும் கானானை நோக்கி சென்று அதிகமதிக மாகக் கானானை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். இவ் வாறாக ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு அவர்கள் செய்த பிரயாணங்கள், கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அடைகிற முன்னேற்றத்தின் பல்வேறு அம்சங்களை அடையாளப்படுத்துகின்றன. இந்த முன்னேற்றமானது நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்திலிருந்து மென்மேலும் தூரமாகக் கொண்டு போய், ராஜ்யத்திற்கு மென்மேலும் நெருங்க செய்கிறது. மேலும் இந்த முன் னேற்றம் நம்மை ராஜ்யத்திற்காகத் தகுதிப்படுத்துகிறது. ஆகையால் இஸ்ரயேலர்கள் அடுத்தடுத்ததாகச் செய்த பிரயாணங்களின் மூலம் அவர்கள் கானானை நோக்கி முன்னேறுவதென்பது கிறிஸ்தவ வாழ்க்கையில் நம் முடைய முன்னேற்றத்தை அடையாளப்படுத்துகிறது. அது நம்மை ராஜ்யத்திற்காக அதிகமதிகமாகத் தகுதிப்படுத்து கிறது. அதின் விளைவாக நம்மை மென்மேலும் ராஜ்யத் திற்குக் கொண்டு செல்கிறது.

45. நாம் கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்று வகை யான படிகளின் மூலம் விசேஷமாக இந்த முன்னேற் றத்தை அடைகிறோம். அந்தப் படிகளாவன: (1) தேவ வார்த்தையைத் தியானிப்பது, (2) தேவ வார்த்தைக்கு இணக்கமாக அதற்கு ஊழியஞ் செய்வது, (3) தேவ வார்த்தையை அப்பியாசிப்பது. இந்த மூன்றாம் படியில் கிறிஸ்தவனுடைய விழித்திருத்தலும், ஜெபமும் அடங்கி இருக்கின்றன. இவ்வாறாக நாம் அறிவிலும், ஊழியத் திலும், குணநலன்களிலும் (கிருபை) அடைகிற வளர்ச் சியே (2பேது. 3:18; ரோம.12:1), கானானை நோக்கி இஸ்ரயேலர்கள் செய்த பிரயாணங்களின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இது உண்மையானதென் பதும் வெளிப்படையாயிருக்கிறது. ஏனென்றால் நாம் இந்த மூன்று அம்சங்களில் தொடர்ந்து வளரும் போது தொடர்ந்து உலகத்திலிருந்து அதிகமதிகமாக விலகி, ராஜ்யத்திற்காக மென்மேலும் தகுதி பெற்று, அதன் விளைவாக அதிகமதிகமாக ராஜ்யத்தை நெருங்கி செல் கிறோம். நாம் இந்த அபிவிருத்தியில் முழுமை அடையும் போது, ராஜ்யத்தை நோக்கி நாம் செய்யும் பிரயாணத்தின் முடிவாகிய யோர்தானின் கரையில் நாம் நிற்போம். உருவகமான எகிப்திலிருந்து, உருவகமான கானானாகிய ராஜ்யத்திற்கு நாம் செய்யும் பிரயாணமாகிய கிறிஸ்தவ வாழ்க்கையின் முன்னேற்றத்தைப் பற்றிய இந்த உருவகத் தைக் குறித்து நாம் பாடல் எண். 117-ஐ மிக பொருத் தமாகப் பாடுகிறோம்!

பாதை காட்டும் யாவே தேவா!
பரதேசியான நான்
பலவீனன் அறிவீனன்
இவ்வுலகம் காடுதான்
வானாகாரம் /2
தந்து என்னைப் போஷியும் /2

ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்
தீப மேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்
வல்ல மீட்பர் /2
என்னைத் தாங்கும் யெஷூஆவே – வானாகாரம்

சாவின் அந்தகாரம் வந்து
நான் அழிந்து போகிலும்
சாவின் மேலும் வெற்றி தந்து
என்னைச் சேர்க்கும் காலத்தில்

கீத வாழ்த்தல் /2
உமக்கென்றும் பாடுவேன் - வானாகாரம்

46. கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய பகுதியைப் பொருத்தவரை, முந்திய பத்தியில் சொல்லப்பட்ட மூன்று காரியங்களுக்கும் மேலாக நாம் எதையும் செய்ய வேண்டியதில்லை. நாம் இந்த விஷயத்தைக் குறித்து எவ்வளவு நேரம் சிந்தித்தாலும், கிறிஸ்தவ வாழ்க்கையில் இந்த மூன்று காரியங்களைத் தவிர வேறு எந்த காரியத்தையும் நம்முடைய அபிவிருத்தி சம்பந்தமாகக் குறிப்பிட முடியாது. இஸ்ரயேலர்கள் செய்த பல் வேறு பிரயாணங்கள், நம்முடைய கிறிஸ்தவ பிரயாணத்தின் இந்த மூன்று படிகளில் பல்வேறு அம்சங்களை அடையாளப்படுத்துகின்றன. பொதுவாகச் சொன்னால் நாம் பின்வரும் வரிசையில் முன்னேற்றமடைகிறோம்: (1) முதலாவதாக, ஸ்தம்பத்தின் முன்னேற்றத்தினால் அடையாளப்படுத்தப்படுகிற விசேஷித்த சத்தியத்தைக் கற்றுக் கொள்கிறோம், (2) இரண்டாவதாக, நம்முடைய சக மனிதர்கள் அதைக் கற்றுக் கொள்ளவும், பரப்பவும், அப்பியாசிக்கவும் அவர்களுக்கு உதவுகிறோம், (3) மூன்றாவதாக, அந்த விசேஷித்த சத்தியத்தில் அடங்கியுள்ள குண நலன்களையும் ஆவிக்குரிய பற்றுதல்களையும் அபிவிருத்தி செய்து கொள்கிறோம்.

47.(1) நாம் அந்த விசேஷித்த சத்தியத்தைக் கற்றுக் கொள்வதென்பது, முன்னேறிக் கொண்டிருக்கிற ஸ்தம்பத்தை இஸ்ரயேலர்கள் நோக்கி பார்த்துக் கொண்டிருப்பதின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. (2) நாம் இந்த சத்தியத்தை மற்றவர்களுக்குக் கொடுத்து ஊழியஞ் செய்வதென்பது, அதிக பலமுள்ள இஸ்ரயேலர்கள் பல வீனமான சகோதரர்களுக்கு முன்னிருக்கும் பாதையைப் பார்ப்பதற்கு அவர்களுக்கு உதவுவதின் மூலமும், அவர்களுக்கு அதிக பாரமாயிருக்கிற சுமைகளைச் சுமக்க அவர்களுக்கு உதவுவதின் மூலமும், தொடர்ந்து பிரயாணம் செய்ய அவர்களை ஊக்குவிப்பதின் மூலமும் அடையாளப்படுத்தப்படுகிறது. (3) நாம் குணநலத்தில் முன்னேற்றமடைவதென்பது, ஒவ்வொரு பிரயாணத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இஸ்ரயேலர்கள் ஒவ்வொரு படியாகத் தொடர்ந்து நடப்பதின் மூலம் அடையாளப் படுத்தப்படுகிறது.

48. பிரியமானவர்களே, நாம் நம்முடைய மேக அக்கினி ஸ்தம்பத்தைத் தொடர்ந்து நோக்கி பார்த்துக் கொண்டிருந்து, நம்முடைய புரிந்து கொள்ளுதலின் கண்களை அகலமாகத் திறந்து வைத்திருப்போமாக. நாம் வெற்றிகரமாகப் பிரயாணம் செய்வதற்கு இதுவே முன்நிபந்தனையாகும். மேக அக்கினி ஸ்தம்பத்திற்குக் கவனம் செலுத்தாத இஸ்ரயேலர்கள் வழி தவறி, மற்ற வர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு வழிக் காட்டுவதற்கு எதுவுமில்லாமல், பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அலைந்து திரிந்தார்கள். அவர்களில் மிகச் சிலர் மட்டுமே பிரயாணம் செய்து கொண்டிருக்கிற கூட்டத்தைக் கண்டு கொண்டு அவர்களோடு திரும்பச் சேர்ந்து கொண்டார்கள். பெரும்பான்மையோர் பாலைவனத்தில் சோர்வடைந்து மரித்துப் போனார்கள். நாமும் நம்முடைய மேக அக்கினி ஸ்தம்பத்தைத் தொடர்ந்து நோக்கி கொண்டிராவிட்டால் நம்முடைய காரியமும் அவ்வாறே இருக்கும்.

49. மேலும் நம்மோடு பிரயாணம் செய்து கொண்டிருக்கிறவர்களின் தேவைகளில் அவர்களுக்கு ஊழியஞ் செய்வதை அசட்டை செய்யாதிருப்போமாக. எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய காலடிகள் அந்த மேக அக்கினி ஸ்தம்பத்தைத் தொடர்ந்து பின்பற்றுவதைக் குறித்து நாம் கவனமாயிருப்போமாக. அநேகர் செய்வதைப் போல் சோர்வினாலும், கால்வலியினாலும், பாலைவனத்தின் சூரிய வெப்பத்தினாலும், மணலினாலும் பிரயாணத்தை விட்டுவிட்டு கர்த்தருடைய சேனைகளிலிருந்து விலகி செல்லாதிருப்போமாக. நாம் முன்னேற்றமடையத் தொடங்குவதென்பது இஸ்ரயேலர்கள் பிரயாணத்தைத் தொடங்குவதின் மூலமும், அந்த முன்னேற்றத்தில் தொடர்வதென்பது இஸ்ரயேலர்கள் தொடர்ந்து பிரயாணம் செய்வதின் மூலமும், அந்த முன்னேற்றத்தில் நிறைவடைவதென்பது அவர்கள் அந்த பிரயாணத்தை முடித்ததின் மூலமும் அடையாளப் படுத்தப்படுகின்றன.

50. கிறிஸ்தவ வாழ்க்கையில் அபிவிருத்தி அடைவதற்கு நாம் செய்ய வேண்டிய இந்த மூன்று காரியங்களுக்குக் கூடுதலாக மற்றொரு பகுதியும் இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் சகிக்க வேண்டிய ஒரு பகுதியும் இருக்கிறது. நாம் குணாம்ச சோதனைகளையும், பரீட்சைகளையும், சத்தியம் மற்றும் நீதியின் மேலுள்ள வைராக்கியத்தினால் வரும் பாடுகளையும், சத்தியத்தையும் நீதியையும் உண்மைத்துவத்துடன் பற்றிக் கொள்வதினால் வரும் துன்புறுத்தலையும் சகிக்க வேண்டும். இவைகளும் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கின்றனவென்று வேத வசனங்கள் மிகுதியாகச் சாட்சி கூறுகின்றன (மத். 5:10-12; யோவா. 16:2; அப். 14:22; 2 தீமோ. 3:12; 2 கொரி. 4:8-13; யாக். 1:2-4, 12; 1 பேது. 2:19-21; 4:12-16). இவைகளில் எந்த ஒரு காரியமும் நாம் செய்ய வேண்டியவைகளாக அல்லாமல், கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் சகிக்க வேண்டிய பகுதிகளாக இருக்கின்றன. அவைகள் அபிவிருத்தியின் வெளிப்பாடுகளாக இல்லாமல், சகித்தலின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. ஆகையால் நாம் அவைகளில் எதையும் செய்யாமல் சகிக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய, அபிவிருத்தி அடைய வேண்டிய பகுதியானது, இஸ்ரயேலர்கள் மேக அக்கினி ஸ்தம்பத்தைப் பின்பற்றுவதின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. ஆகையால், கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் சகிக்க வேண்டிய பகுதி என்பது, எகிப்திலிருந்து கானான் வரையுள்ள பகுதியில் இஸ்ரயேலர்களின் எந்த அனுபவங்களின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது?

51. அவர்களுடைய வனாந்தர அனுபவங்களில் மற்றொரு அம்சம் மட்டுமே இருந்தது. இது அவர்களுடைய பாளயமிறங்குதல்களில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அனுபவங்கள், அதாவது அவர்கள் பாளயமிறங்குவதென்பது கிறிஸ்தவ வாழ்க்கையில் சகிக்க வேண்டிய பகுதியை அடையாளப்படுத்துகிறது. இது பின்வரும் காரியங்களிலிருந்து தெளிவாகிறது: அவர்களுடைய பிரயாணத்தில், பிரயாணம் பண்ணுதல் மற்றும் பாளயமிறங்குதல் என்ற இரு காரியங்கள் மட்டுமே இருந்தன. அவர்களுடைய பிரயாணம் பண்ணுதல் கிறிஸ்தவ வாழ்க்கையில் செயல்பட வேண்டிய பகுதிகளை அடையாளப்படுத்துவதால், கிறிஸ்தவ வாழ்க்கையில் சகிக்க வேண்டிய காரியங்களை அடையாளப் படுத்தக் கூடிய ஒரே காரியம் அவர்களுடைய பாளயமிறங்குதல்களாக இருக்கும். பிரயாணத்தின் இயல்பானது கிறிஸ்தவ வாழ்க்கையின் முன்னேற்றத்தை பொருத்தமாக அடையாளப்படுத்துவதைப் போலவே, பாளயமிறங்குதலின் இயல்பானது, சோதனை, பாடுகள் மற்றும் துன்புறுத்தலின் கீழ் நிலை நிற்பதை மிகப் பொருத்தமாக

அடையாளப்படுத்துகிறது (எபே. 6:13).

52. மேலும் அடையாளத்தில் இஸ்ரயேலர் களுக்கு வந்த சோதனைகளெல்லாம், அவர்கள் பாளய மிறங்கின போது வந்தவைகளாக இருந்தன. நம்முடைய சோதனையின் காலம், நாம் பாளயமிறங்கும் காலமாக இருக்கிறதென்று இதுவும் காண்பிக்கிறது. அவர்கள் சிவந்த சமுத்திரத்தண்டையில் பாளயமிறங்கி இருந்த போது முதல் முறையாகச் சோதிக்கப்பட்டிருந்தார்கள் (யாத். 14:2-20). மன்னா சம்பந்தமாக வந்த சோதனை (எண்.12:4-34), மோசே நீண்ட காலத்திற்கு மலையில் தங்கி இருந்ததால் வந்த சோதனை (யாத். 32:1-35), பாகால் பேயோரின் காரியத்தில் வந்த சோதனை (எண். 25:1-18), கொள்ளிவாய் சர்ப்பங்களினால் வந்த சோதனை (எண். 21:4-9), கோராகு, தாத்தான், அபிராம் முதலியவர்களால் வந்த சோதனை (எண். 16:1-50) - இவைகளெல்லாம் இஸ்ரயேலர்கள் பாளயமிறங்கி இருந்த போது வந்த சோதனைகளாக இருந்தது. இவைகள் நம்முடைய சோதனைகளை அடையாளப்படுத்துகிறது என்று பரிசுத்த பவுல் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார் (1கொரி. 10:5-14).

53. மோசேயின் மனைவி சம்பந்தமாகவும் தேவ னுடைய விசேஷித்த வாயாகச் செயல்பட்டுக் கொண்டி ருந்த மோசே சம்பந்தமாகவும் மிரியாமுக்கும் ஆரோனுக்கும் வந்த சோதனையும் இஸ்ரயேலர்கள் பாளயமிறங்கி இருந்தபோது நிகழ்ந்தது (எண். 12:1-16). சபை வகுப்பார் எளிமையான பிறப்புடையவர்களாக இருப்பது சம்பந்தமாகவும், தேவனுடைய விசேஷித்த வாயாகச் செயல்படுகிற யெஷுஆ சம்பந்தமாகவும் சில கிரீடத்தை இழந்தவர்களுக்கும் கிரீடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர்களுக்கும் வந்த சோதனையை இது அடையாளப்படுத்துகிறது. மேலும் பத்து வேவுக்காரர்கள் கொண்டு வந்த அறிக்கை சம்பந்தமாக வந்த பெரிய சோதனையும் இஸ்ரயேலர்கள் பாளயமிறங்கி இருந்த போது வந்தது (எண். 13:26-14:45). இது யூதயுக அறுவடையிலும் சுவிசேஷ யுக அறுவடையிலும் தேவ னுடைய உண்மையான மற்றும் பெயரளவிலான ஜனங் களுக்கு வந்த பொதுவான சோதனையை அடையாளப் படுத்துகிறது. எகிப்துக்கும் கானானுக்கும் இடையில் இஸ்ரயேலர்களுக்கு இருந்த அனுபவங்களில் குறிப்பிடப் பட்ட மற்ற எல்லா சோதனைகளும் கூட அவர்கள் பாளயமிறங்கி இருந்த போதே நிகழ்ந்தன. ஆகையால் இஸ்ரயேலர்களின் பாளயமிறங்குதல்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் சகிக்க வேண்டிய அம்சங்களை அடை யாளப்படுத்துகின்றன என்று முடிவு செய்வதற்கு நமக்குப் போதுமான சான்றுகள் இருக்கின்றன.

54. இந்த சகித்தலின் அனுபவங்களில் மூன்று வகைகள் இருக்கின்றன. முதலாவதாக நாம் மனதிலும் இருதயத்திலும் அடைகிற அபிவிருத்தியினால் வருகிற அழுத்தத்தை வெற்றிகரமாகச் சகிக்க வேண்டும். நம் முடைய மனதைப் பொருத்தவரை எதிராளியானவனின் வாயாகச் செயல்படுகிறவர்களின் மூலம் அவன் நம்முடைய மனதிற்கு முன் வைக்கிற தந்திரமான தப்பறைகளினாலும் உண்மைபோல் தோன்றுகிற வாதங் களினாலும் இந்த அழுத்தம் உண்டாகிறது. அவன் நம்மை இந்த வஞ்சனைகளினால் உண்டாகும் பதட்டமுண்டாக் கும் பிரம்மைக்கு இரையாக்க நாடுகிறான். நாம் ஏற் கனவே கற்றுக்கொண்ட சத்தியத்தினிடத்தில் அன்பினா லும் உண்மைத்துவத்தினாலும் நம்முடைய இருதயங்கள் நிறைந்திராவிட்டால், இந்த வஞ்சனைகளில் ஏதேனும் ஒன்றிற்கு இடம் கொடுப்போம் (2தெச. 2:9-12). பல நேரங்களில் இந்த அழுத்தம் மிகப்பெரிதாக இருக்கும். ஏனென்றால் அந்த தப்பறை தந்திரமானதாக இருப்பது மட்டுமல்ல, அதை நமக்கு முன் வைப்பதற்குச் சாத்தான் உபயோகிக்கிற செயலியக்கி முற்காலத்தில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவனைப் போஷித்தவராகவும் இருக்கக் கூடும். அது அவ்வாறு இருக்கும்போது, அந்த சோதனை மிகவும் தீவிரமாக இருக்கும். நாம் பெற்ற பல அனுபவங் கள் இதற்குச் சாட்சியாயிருக்கின்றன.

55. அடுத்ததாக, நம்முடைய இருதயங்கள், அதாவது நம்முடைய குணநலன்கள் மற்றும் நல்ல மென்னுணர்வுகளும் கொடிய சோதனைக்குட்படுத்தப் படுகின்றன. இந்த சோதனை ஒருவகையில் வரக்கூடும், இரு வகைகள் சேர்ந்ததாக இருக்கக்கூடும், அல்லது பல வகைகளைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும். ஏனென்றால் நாம் நம்முடைய குணாம்சத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் பரீட்சிக்கப்பட வேண்டும். நம்முடைய சோதனைகளின் வழிகளாக இருக்கிற சில காரியங்கள் இவ்வாறா யிருக்கின்றன: இழப்புகள், ஏமாற்றங்கள், தாமதங்கள், கட்டுப்பாடுகள், உபயோகிக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப் படுதல், நம்முடைய மற்றும் மற்றவர்களுடைய தவறுகள் மற்றும் குறைபாடுகள், கஷ்டங்கள், தேவைகள், தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல், கள்ள சகோதரர்கள், சோர்வு, கடுமையான ஏழ்மை, நோய், வறுமை, வலி, துன்புறுத்தல் முதலியவைகள். இவைகள் தனியாகவோ இரண்டும் சேர்ந்தோ அல்லது பல வகைகள் சேர்ந்தோ நம்முடைய குணநலன்களையும், நல்ல மென்னுணர்வு களையும் அழுத்தும். இந்த பரீட்சையின் கீழ் நாம் தோல்வி அடைந்தால் எதிராளியானவன் நம்முடைய காரியத்தை ஏதேனுமொரு விதத்தில் இலகுவாக்கும் ஆலோசனையை முன் வைப்பான்.

56. இரண்டாம் வகையான சகித்தலில், நாம் சத்தியத்தைப் படிப்பதிலும், ஊழியத்திலும் உண்மையா யிருப்பதால் நம்முடைய மனுஷீகத்திடமிருந்து வருகிற அழுத்தமாகும். பொதுவாகச் சகோதரர்கள் செய்யும் அன்றாட வேலையே மிகவும் சோர்வூட்டும் ஒன்றாக இருக்கிறது. அதற்குக் கூடுதலாக நாம் படிப்பதற்கும் ஊழியஞ் செய்வதற்கும் இன்னும் அதிக நேரத்தை உபயோகிக்கும் போது நம்முடைய சோர்வும் அதிகரிக் கும். சத்தியத்தைப் படிப்பதினால் நமக்குப் பல நேரங் களில் மனரீதியான சோர்வுண்டாகிறது. ஊழியத்தினால் மனரீதியான மற்றும் உடல்ரீதியான சோர்வுண்டாகிறது. பல நேரங்களில் இந்த சோர்வு தூக்கமின்மையையும், நரம்பு தளர்ச்சியையும் விளைவிக்கும். சில நேரங்களில் அது நரம்புகளை மிகவும் பலவீனமாக்குமளவிற்கு அதிகரிக்கக் கூடும். நம்முடைய கர்த்தர் கெத்செமனே தோட்டத்தில் ரத்த வியர்வை சிந்தினதில் இதை நாம் காண்கிறோம். சத்தியத்தைப் படிப்பதற்கும், அதற்கு ஊழியஞ் செய்வதற்கும் வெளிப்படுத்தின வைராக்கியத் தினால் பலர் உடல் நலத்தை இழந்தார்கள். மற்றவர்களோ அந்த வேலைக்குப் பணரீதியான ஆதரவைக் கொடுப் பதற்குப் பல சௌகரியங்களை விட்டுக் கொடுத்தார்கள். நாம் தேவனுடைய சத்தியத்திற்கும், அதைப் படிப்பதற் கும், அதற்கு ஊழியஞ் செய்வதற்கும் விசுவாச உண்மைத் துவமுள்ளவர்களாக இருக்க விரும்பினால், மிகுந்த சுய வெறுப்பையும், துன்பத்தையும் சரீர ரீதியான சகிப்பையும் கோருகிற சூழ்நிலைகளுக்குள் கர்த்தர் நம்மை வைப்பார். இவ்விதமான சகித்தலின் சோதனைகளெல்லாம் நம் முடைய சரீரத்திலிருந்தும், சரீரத்திலும் வருகின்றன.

57. இறுதியாகக், கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதியாயிருக்கிற சகித்தல் என்பது சத்தியத்தைப் படிப்

பதிலும் அதற்கு ஊழியஞ் செய்வதிலும், அதை அப்பியாசிப்பதிலும் (விசேஷமாக அதற்கு ஊழியஞ் செய்வதில்) நாம் வெளிப்படுத்துகிற உண்மைத்துவத்தினிமித்தம் வருகிற துன்புறுத்தலின் மத்தியில் காண்பிக்கப்பட வேண்டும். இந்த துன்புறுத்தல் என்பது பல வகைகளில் செய்யப்படுகிறது: நிந்தனை, தூஷணம், வெறுப்பு, வன்மம், வியாபார ரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் புறக்கணிக்கப்படுவது, ஐக்கியத்திலிருந்து வெளியேற்றப் படுவது, காவலில் வைக்கப்படுவது, அடிகள், சித்தர வதைகள், கொடூரமான மரணம் முதலியவைகள். அநேகர் மிக மோசமான வகையான பரீட்சைகளுக்குட்படுத்தப் படவில்லை என்றாலும், விசுவாச உண்மைத்துவமுள்ள அனைவரும் ஏதேனுமொரு வகையான துன்புறுத்தலின் அழுத்தத்தினால் பரீட்சிக்கப்பட வேண்டும். மேலும் இவ்வாறான சோதனைகளையும் பாடுகளையும் துன்புறுத் தல்களையும் நாம் அனுபவிக்கும்போது, இஸ்ரயேலர் களின் பாளயமிறங்குதல்களின் நிஜநிறைவேறுதல்களை நாம் அனுபவிக்கிறோம். அவர்களுடைய பாளயமிறங்கு தலின் தொடக்கம் நம்முடைய சகித்தலின் அனுபவத்தின் தொடக்கத்தையும், அவர்கள் தொடர்ந்து பாளயமிறங்கி இருப்பது நாம் தொடர்ந்து சகித்துக் கொண்டிருப் பதையும், அவர்களுடைய பாளயமிறங்குதல் முடிவுக்கு வருவது நம்முடைய பல்வேறு சகித்தலின் அனுபவங்கள் முடிவுக்கு வருவதையும் அடையாளப்படுத்துகின்றன.

58. எண்.9:18 கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாச ஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். எண். 9:17 மற்றும் 18-ம் வசனங்களின் ஆரம்பத்திலுள்ள எபிரெய வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மேக அக்கினி ஸ்தம்ப மானது முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற சத்தியத் தையும் அதின் ஆவியையும் அடையாளப்படுத்துகிறது என்பதற்குரிய கூடுதலான உறுதியான நிரூபணத்தை நாம் காண்போம். இந்த வசனங்களின் முதல் வாக்கியத் தொடர்களைச் சொல்லர்த்தமாக மொழிபெயர்க்கும் போது அது இவ்வாறு இருக்க வேண்டும்: "மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்புகிறதின் வாயினால்... இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம் பண்ணுவார்கள்" (Literally- *"At the mouth of the cloud's ascending from over the tent, the children of Israel journeyed").* "கர்த்தருடைய வாயினால் இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்" *(Literally – at the mouth of the LORD, the children of Israel journeyed")* . இந்த இரண்டு வாக்கியங்களும் ஒரே அர்த்தமுடையவை களாக இருக்கின்றன. ஆகையால் இரண்டாம் அறிக்கை யானது நிஜநிறைவேறுதலான ஸ்தம்பம் கர்த்தருடைய வாயாக இருக்கிற அவருடைய வார்த்தையும் ஆவி யுமாகும் (சங். 45:1). இந்த காரியத்தில் அந்த வாய் ஒரு கட்டளையைக் கொடுப்பதால், 18-ம் வசனம் சொல்லர்த்த மாக மொழிபெயர்க்கப்படவில்லையென்றாலும் அதின் கருத்தை சரியாகத் தெரிவிக்கிறது - "கர்த்தருடைய கட்டளையின்படியே ..."

59. அடையாளத்தில் 18-ம் வசனம் பின்வரும் காரியத்தை போதிக்கிறது: இஸ்ரயேலர்களின் எல்லா பிரயாணங்களையும் கட்டளையிட்டவர் தேவனே அவர் களை இறுதியாகக் கானானுக்குக் கொண்டு வரும் வரை அவர்களுடைய பிரயாணத்தின் ஒவ்வொரு நிலைக்கும் அவர்களை அனுப்பினவரும் அந்த நிலையில் அவர் களைக் காத்தவரும் தேவனே. நிஜநிறைவேறுதலில் இது பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறது: ராஜ்யத்தை நோக்கி நாம் செய்யும் பிரயாணத்தில் நம்முடைய அடிகள் எல்லாவற்றையும் கட்டளையிடுகிறவர் தேவனே (சங். 37:23). நாம் ராஜ்யத்தைச் சென்றடையும் வரை நாம் செய் கிற பிரயாணத்தில் வருகிற ஒவ்வொரு சூழ்நிலையையும் ஒவ்வொரு அனுபவத்தையும் அவரே திட்டமிட்டிருக் கிறார். நிஜநிறைவேறுதலான மேக அக்கினி ஸ்தம்பத்தின் மூலம் தேவன் காட்டும் வழியை விசுவாச உண்மைத் துவத்துடன் நாம் பின்பற்றும் போது, நம்முடைய நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை (சங் 37:31) என்பதற் கும், நம்முடைய காலடிகள் தேவனுடைய பாதையை விட்டு விலகுவதில்லை என்பதற்கும் (சங் 44:19), இந்த உண்மையே உத்திரவாதமாக இருக்கிறது.

60. மேக அக்னி ஸ்தம்பத்தின் மூலம் கர்த்தர் கொடுத்த கட்டளையின்படியே இஸ்ரயேலர்கள் பாளய மிறங்கினார்கள் என்றும் 18-ம் வசனம் காண்பிக்கிறது. நிஜநிறைவேறுதலில் நம்முடைய பிரதிகூலமான அனு பவங்களைத் தேவனே ஏற்பாடு செய்கிறார் என்று இது அர்த்தப்படுத்துகிறது. அவருடையவர்களாக இருக்கிற நமக்கு, அவர் அனுமதிக்காத எதுவும் நேரிடாது. தேவன் அனுமதித்து, மேலாதிக்கம் செய்து மாற்றி அமைக்கிற அனுபவங்களைத் தவிர, மற்றெந்த அனுபவங்களும் அவருக்குப் பிரதிஷ்டை செய்தவர்களின் வாழ்க்கையில் வருவதில்லை (ரோம. 8:28). நம்முடைய பிதா அவைகள் எல்லாவற்றையும் ஆண்டுகொண்டு, மேலாதிக்கம் செய் கிறார். நம்முடைய முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியின் அனுபவங்கள் அவரிடமிருந்து வருகின்றன. சோதனை கள், பாடுகள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றைச் சகிக்க வேண்டிய நம்முடைய அனுபவங்களும் அவரிடமிருந்து வருகின்றன. இந்த அனுபவங்களில் இரண்டாம் நிலை செயலியக்கிகள் (எதிரிகள் போன்றவர்கள்) எவ்வளவு சுறுசுறுப்பாகச் செயல்பட்டாலும், தேவனுக்குப் பிரதிஷ்டை செய்தவர்களின் அனுபவங்கள் எல்லாவற் றிலும் பிரதானமாகக் கிரியை செய்கிறவர் தேவனே.

61. இஸ்ரயேலர்களின் பல்வேறு பாளயமிறங் குதல்களில், அவர்கள் எவ்வளவு நேரம் தங்கியிருக்க வேண்டுமென்று, தேவனே கட்டளையிட்டார் என்று வச. 18 மேலும் காண்பிக்கிறது: "மேகம் வாசஸ்தலத்தின் மேல் தங்கி இருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள்"- அதாவது அவர்கள் "தொடர்ந்து பாளயமிறங்கி இருப்பார்கள்". "அவர்கள் பாளயத்தில் தங்கி இருப்பார்கள்" என்று சொல்லும்போது, பாளய மிறங்கி இருக்கும் போது எந்த ஒரு இஸ்ரயேலனும் தன் கூடாரத்தை விட்டு செல்லவோ, வேலை செய்யவோ, கூடாரத்தில் தங்கி இருப்பதைத் தவிர வேறெந்த காரியங்களைச் செய்யவோ கூடாது என்று நாம் புரிந்து கொள்ளக் கூடாது. மேலே கொடுக்கப்பட்ட வசனங்கள் (பாளயமிறங்கின போது வந்த சோதனைகளைப் பற்றிய குறிப்புகள்) இது உண்மை என்பதைக் காண்பிக்கின்றன. இது அவர்கள் தொடர்ந்து பாளயமிறங்கி இருந்தார்கள் என்பதையே அர்த்தப்படுத்துகிறது. ஸ்தம்பம் வாசஸ்தலத் தின் மேல் தங்கி இருக்கும் வரை, அவர்கள் தொடர்ந்து பாளயமிறங்கினார்கள் என்பது, பின்வரும் உண்மையை அடையாளப்படுத்துகிறது: தேவனுடைய ஜனங்கள் சோதனைகள், பாடுகள் மற்றும் பரீட்சைகளின் கீழ் எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அவ்வளவு காலமும் அவர்கள் அவை களின் கீழ் நீடித்திருக்க வேண்டும். நாம் எவ்வளவு காலம் நம்முடைய சோதனையைச் சகிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறாரோ, அவ்வளவு காலம் அதைச் சகிப் போமாக. பொறுமையில்லாத பிள்ளைகளைப் போல்,

எவ்விதத்திலாவது நம்முடைய சோதனை மயமான அனுபவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள நாடாமலிருப் போமாக. அவ்வாறு செய்தால் தேவன் திட்டமிட்ட பாடங்களைக் கற்றுக்கொள்ளத் தவறுவோம்.

62. நாம் இன்னும் அபிவிருத்தி செய்து கொள் ளாத காரியங்கள் சம்பந்தமாக அல்லாமல், ஏற்கனவே அபிவிருத்தி செய்து கொண்ட காரியங்கள் சம்பந்தமாகச் சோதிக்கப்படுவோம். ஆகையால் நம்முடைய பாளய மிறங்குதல்கள் என்பது, அது சம்பந்தப்பட்ட பிரயாணங் களைத் தொடர்ந்து வருமென்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். அதாவது நாம் ஏற்கனவே அடைந்த காரியங்கள் சம்பந்தமாகவும், அந்தக் காரியங்களிலும் சோதிக்கப்பட்டு, பாடுபட்டுத் துன்புறுத்தப்படுகிறோம். ஆகையால் இஸ்ரயேலர்கள் ஒருமுறை பாளயமிறங் குவதற்கு முன் செய்யும் பிரயாணமானது, நாம் சகிக்க வேண்டிய காரியம் வருவதற்கு முன், அதில் நாம் அடைகிற வளர்ச்சியை அடையாளப் படுத்துகிறது.

63. எண்.9:19 மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயா ணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப் பார்கள். இஸ்ரயேலர்களின் சில பாளயமிறங்குதல் நெடு நாட்களுக்கு நீடித்தது என்று 19-ம் வசனம் காண்பிக்கிறது. நாம் சகிக்க வேண்டிய சில அனுபவங்கள் நீண்ட காலத் திற்கு நீடிக்கும் என்பதை இது அடையாளப்படுத்துகிறது. பிரதிஷ்டையின் பாதையில் நீண்ட காலமாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறவர்கள், சில சோதனைகள் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்பதை அனுபவத்தின் மூலம் அறிகிறோம். சில சகோதரர்கள் சில காரியங்கள் சம்பந்த மாகச் சோதிக்கப்படும் அனுபவங்களைப் பல வருடங் களாகச் சகித்துக் கொண்டு வந்தார்கள். சிலர் பத்து வருடங்களுக்கும், சிலர் இருபது வருடங்களுக்கும் கூட பாடுபட்டார்கள். இதிலிருந்து நாம் நம்முடைய அன்பான பரமபிதாவின் நீடிய சகிப்பையும் பொறுமையையும் உடனடியாக உணருகிறோம். அதே நேரத்தில் நாம் கற்றுக் கொள்வதில் தாமதமாயிருப்பதையும், மந்தபுத்தியுள்ளவர் களாயிருப்பதையும் உணருகிறோம். நம்மில் சிலர் சில சோதனைகளை நீண்ட காலத்திற்கு அனுபவித்த பிறகும், மிக தாமதமாகக் கற்றுக் கொள்வதால், நம்முடைய போதகரால் சிட்சிக்கப்படத்தக்கவர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் மிகவும் தாமதமுள்ளவர்களாக இருந்தா லும், நம்முடைய உருவம் இன்னதென்று அறிந்தும், நாம் மண்ணென்று நினைவுகூர்ந்தும், அவர் தொடர்ந்து நம் மிடம் இரக்கத்தை வெளிப்படுத்துகிறார்.

64. ஆகையால் நீண்ட கால பாளயமிறங்குதலின் போது, தொடர்ந்து பாளயமிறங்கியிருந்த இஸ்ரயேலர் களைப் போல் நாமும் இருப்போமாக. அதாவது நம் முடைய சோதனைகள், பாடுகள் மற்றும் துன்புறுத்தலின் அனுபவங்களின் கால அளவைக் குறித்துச் சினங் கொண்டு, நிஜநிறைவேறுதலான பாளயமிறங்குதலை விட்டு விடாதிருப்போமாக. அதாவது நம்முடைய சோதனைகளைப் புறக்கணித்து, எந்த பாடங்களைக் கற்றுக் கொடுக்க அவைகள் திட்டமிடப்பட்டிருக் கின்றனவோ, அந்தப் பாடங்களைக் கற்றுக் கொள்ள மறுக்காமலிருப்போமாக. ஏனென்றால் நாம் அவ்வாறு மறுத்தால் தேவனுடைய இஸ்ரயேலை விட்டு விட்டு, தேவனுடைய ஜனங்களிலிருந்து தூரமாக அலைந்து திரிபவர்களாக இருப்போம். அடையாளத்திலும் கூட அந்த ஸ்தம்பம் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும் வரை, இஸ்ரயேலின் பாளயத்தில் நீடித்திருக்க மறுத்த இஸ்ரயேலனுக்கு அதுவே நடந்திருக்கும். இதற்கு மாறாக, இஸ்ரயேலின் பாளயத்தில் தொடர்ந்து தங்கி இருந்து, தேவனுடைய ஜனங்களோடு நீடித்திருந்த இஸ்ர யேலர்களைப் போலவே, நாமும் தேவன் நமக்கு நியமிக்கிற சோதனைகளையும், பாடுகளையும், துன்புறுத் தல்களையும் பொறுமையோடும் மகிழ்ச்சியோடும் சகிப் பதில் விடாமுயற்சியோடிருப்போமாக. ஏனென்றால் நாம் அதில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந் தால், அதின் முடிவு மெய்யாகவே மகிமையாக இருக்கு மென்று நாம் உணருகிறோம். ஏனென்றால் இந்த அனுபவங்களை விசுவாச உண்மைத்துவத்துடன் சகிக்க வேண்டுமென்பது தேவன் நமக்குக் கொடுத்த "காவ லாக"(பொறுப்பாக) இருக்கிறது. மேலும் ஒரு காரியம் சம்பந்தமாகத் தேவன் கொடுத்த இந்த "காவலைக்" "காத்துக் கொள்ளும் வரை" நமக்கு மேலும் முன்னேற்றம் அளிக்கப்படாது (இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள்).

65. எண்.9:20 மேகம் சிலநாள் மாத்திரம் வாச ஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்த ருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார் கள். இஸ்ரயேலர்களின் சில பாளயமிறங்குதல்கள் சில நாள் மாத்திரம் நீடித்தன என்று 20-ம் வசனம் காண்பிக் கிறது. நிஜநிறைவேறுதலில், சோதனைகள், பாடுகள் மற்றும் துன்புறுத்தலைச் சகிக்கும் சில அனுபவங்கள், குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கும் என்பதை அர்த்தப்படுத்தும். இது உண்மையானது என்று அனுபவத் திலிருந்து நாம் அறிகிறோம். குறுகிய கால அனுபவங் களும், நீண்ட கால அனுபவங்களும், கர்த்தரால் உண்டான வைகளாக இருக்கின்றன. 20-ம் வசனத்தின் நடுவாக்கியத் தொடர் இதைக் காண்பிக்கிறது: "கர்த்தருடைய கட்டளை யின் படியே பாளயமிறங்கி இருந்தார்கள்." ஆகையால் நம்முடைய சகித்தலின் அனுபவங்கள், நீண்ட காலத்திற்கு நீடித்திருக்குமா அல்லது குறுகிய காலத்திற்கு நீடித்திருக் குமா? என்பதைத் தீர்மானிப்பது நமக்குரியதல்ல. அது கர்த்தருக்குரியதாக மட்டுமே இருக்கிறது. ஏனென்றால் நம்மில் எதை அபிவிருத்தி செய்ய அவர் விரும்புகிறார் என்பதை அவர் ஒருவர் மட்டுமே தெளிவாக அறிவார். நாம் அதை அறியாதிருப்பதால், போதுமான அளவிற்குச் சோதிக்கப்பட்டிருக்கிறோமா என்பதைத் தீர்மானிக்க திராணியற்றவர்களாக இருக்கிறோம். நம்முடைய சகித் தலின் அனுபவங்கள் நீண்ட காலத்திற்கு இருந்தாலும், குறுகிய காலத்திற்கு இருந்தாலும், அதைப் பொருட் படுத்தாமல், அவைகள் நீடித்திருக்கும் வரை சிறு பிள்ளைக்கொத்த விசுவாசத்துடனும், மகிழ்ச்சி நிறைந்த நம்பிக்கையுடனும், பலமான அன்புடனும், முழுமையான கீழ்ப்படிதலுடனும் அவைகளைத் தொடர்ந்து சகிப்பது நமக்குரிய காரியமாகும்.

66. நாம் இந்த அனுபவங்களுக்குக் கீழ்படியாத வர்களாகவும் அவைகளுக்கு எதிராக முறுமுறுக்கிறவர் களாகவும் இல்லாதிருப்போமாக. ஏனென்றால் நாம் அவைகளுக்கு எதிராக முறுமுறுத்தால், அவைகளையும் அவைகளின் கால அளவையும் தீர்மானித்த கர்த்தருக்கு எதிராக முறுமுறுக்கிறவர்களாக இருப்போம். இவ்வித மான அனுபவங்களில் அமரிக்கையும் நம்பிக்கையுமே நம்முடைய பெலனாயிருக்கும் என்று நாம் நினைவு கூருவது ஏற்றதாகும். நம்முடைய அனுபவங்களின் விளை வைக் குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. நாம் கர்த்தருக்குள் இளைப்பாறி அவருக்காகக் காத்திருக்க வேண்டும். நாம் அவருக்காகக் காத்திருக்கும் போது அவர் நம்மைத் திடப்படுத்துவார். குளிர்காலம் எவ்வளவு

கொடியதாக அச்சுறுத்தினாலும் வசந்தகாலம் நிச்சயமாக வரவேண்டும். அது இறுதியாக வரும். ஆகையால் எந்தன் ஆத்துமாவே, கர்த்தருக்குக் காத்திரு, திடமனதாயிரு, அவர் உனக்கு புது பெலனை அளிப்பார். ஏனென்றால், 20-ம் வசனத்தின் கடைசி வாக்கியத் தொடரில் எழுதப் பட்டிருப்பதைப் போல், ஏற்ற காலத்தில் மற்றொரு முன்னேற்றத்தின் காலம் நிச்சயமாக வரும்: "கர்த்த ருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள்."

67. எண்.9:21 மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலி லாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள். சில பாளயமிறங்குதல்கள் ஒரு இரவு மட்டுமே நீடித்தன என்றும், சில பாளயமிறங் குதல்கள் ஒரு பகல் மட்டுமே நீடித்தன என்றும் 21-ம் வசனம் நமக்குக் காண்பிக்கிறது. முதலாவதாக, நம் முடைய சகித்தலின் சில அனுபவங்கள் மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கும் என்ற உண்மையை இது அடையாளப்படுத்துகிறது. நம்முடைய அனுபவமும் இதற்கு மிகுதியாகச் சான்றளிக்கிறது. நம்முடைய சகித்த லின் அனுபவங்கள் எல்லாவற்றிலும் நாம் இவ்வாறு விரைவாக ஜெயங் கொண்டால் அது நமக்கு நலமா யிருக்கும். ஏனென்றால் நாம் விரைவாக ஜெயங் கொண் டால், அந்த குறிப்பிட்ட குணப்பண்பில் நாம் பலமுள்ள வர்களாக இருக்கிறோம் என்பதை நிரூபிக்கும். ஆனால் நம்முடைய சகித்தலின் அனுபவங்கள் நீண்ட காலத்திற்கு நீடித்தால், நாம் குறிப்பிட்ட அந்த குணப்பண்பில் அதிக மாகவோ குறைவாகவோ பெலவீனர்களாக இருக் கிறோம் என்பதை நிரூபிக்கும். மேலும் இஸ்ரயேலர்கள் செய்ததைப் போலவே, மிக குறுகிய கால சோதனைக்கு பிறகு உடனடியாக பிரயாணம் செய்யவும் (வச. 21), நீண்ட கால அல்லது மிகவும் நீண்ட கால சோதனையின் அனுபவத்திற்கு பிறகு உடனே பிரயாணம் செய்ய (வச. 19,20) நாம் தயாராக இருந்தால் அது நமக்கு நலமா யிருக்கும்.

68. மேலும் இரண்டாவதாக பகல் கால சோத னைக்குப் பிறகு (பரூஷியா காலத்தில் புதிய ஏற்பாட்டின் கருத்துக்கள் சம்பந்தமாக வந்த சகித்தலின் அனுபவத் திற்கு பிறகு) தேவனுடைய ஜனங்கள் முன்னேற்ற மடைந்து கொண்டிருந்த ஸ்தம்பத்தின் புதிதான அபி விருத்திகளுடன் முன்னேற தயாராக இருந்தது அவர் களுக்கு நன்மையை விளைவித்ததைப் போலவே, இரவின் சோதனைக்குப் பிறகும் (எபிப்பெனி காலத்தில் பழைய ஏற்பாட்டின் கருத்துக்கள் சம்பந்தமாக வரும் சகித்தலின் அனுபவத்திற்குப் பிறகு) முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கிற ஸ்தம்பத்தோடு முன்னேற நாமும் தயாராயிருப்பது நமக்கும் நன்மையை விளை விக்கும்.

69. வாசஸ்தலத்தின்மேல் ஸ்தம்பம் சரியாக எவ் வளவு நாட்களுக்குத் தங்கி இருந்ததென்று 19,20 வசனங் கள் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை என்பதைக் கவனிப்போம். நெடுநாட்கள் தங்கி இருப்பதாக 19-ம் வசனமும், சில நாட்கள் மாத்திரம் தங்கி இருந்ததாக 20-ம் வசனமும் குறிப்பிடுகின்றன. ஆகையால் அவைகளுடைய கருத்துக்கள் பொதுவாகக் கர்த்தருடைய ஜனங்களுக்கு வருகிற நீண்ட காலம் மற்றும் குறுகிய கால சோதனை களை அடையாளப்படுத்துவதாக நாம் புரிந்து கொண் டோம். ஆனால் 21-ம் வசனத்தில், ஸ்தம்பம் ஒரு பகல் காலத்திலும், ஒரு இரவு காலத்திலும் தங்கி இருந்ததாகத் திட்டமாகக் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பகல் காலம் குறிப்பாக பரூஷியா கால அனுபவத்தையும், இரவு காலம் எபிப்பெனி கால அனுபவத்தையும் திட்டமாக குறிப்பிடுவதாக நாம் புரிந்து கொண்டோம். இவை களுக்கு இணையாக, பகல் காலம் யூதயுக அறுவடை கால அனுபவத்திற்கும், இரவு காலம் இரு அறுவடைகளுக்கு இடையிலுள்ள காலத்தின் அனுபவங்களுக்கும் பொருந் தும்.

70. எண்.9:22 மேகமானது இரண்டு நாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம் பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள். மேலும் 22-ம் வசனத்தில், இரண்டு நாட்கள், ஒரு மாதம் மற்றும் ஒரு வருஷம் என்ற குறிப்பான கால அளவுகள் குறிப்பிடப் படுகின்றன. இந்த இரண்டு நாட்கள் இரு அறுவடை களையும், அவைகளைத் தொடர்ந்து வரும் இரவுகளை யும் குறிக்கின்றன என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆகையால் இந்த இரு நாட்கள் முழு சுவிசேஷ யுகத்தைக் குறிக்கின்றன. இஸ்ரயேலர்கள் இரண்டு நாட்கள் பாளய மிறங்கி இருப்பதென்பது, இரு அறுவடைகள் மற்றும் அவைகளைத் தொடர்ந்து வரும் இரவுகளில் அதாவது முழு சுவிசேஷ யுகத்தில் சபைக்கு பொதுவாக வந்த சகித் தலின் அனுபவங்களை அடையாளப்படுத்துகின்றன. 1கொரி. 10:6-14 வரையுள்ள வசனங்கள், "யுகங்களின் முடிவு காலங்களிலுள்ளவர்களுக்கு", அதாவது இரு அறு வடை காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கர்த்த ருடைய ஜனங்களுக்குப் பொதுவாக வரும் சில கடின மான அழுத்தத்தின் அனுபவங்களைக் காண்பிக்கின்றன. எபி. 3:12 - 4:11 வரையுள்ள வசனங்கள், இரு அறுவடை களுக்கு இடையிலுள்ள சுவிசேஷ யுகத்திலும், சுவிசேஷ யுக இடைப்பட்ட காலத்திற்கு இணையான சிறு கால மாகிய எபிப்பெனி காலத்திலும் கர்த்தருடைய ஜனங் களுக்குப் பொதுவாக வரும் சில கடினமான அழுத் தத்தின் அனுபவங்களைக் காண்பிக்கின்றன.

71. ஸ்தம்பம் வாசஸ்தலத்தின் மேல் ஒரு மாதம் தங்கி இருப்பதும், இஸ்ரயேலர்கள் அந்த ஒரு மாத காலம் பாளயமிறங்கி இருப்பதென்பதும், பன்னிரண்டு குண நலன்கள் சம்பந்தமாகச் சபை வகுப்பாருக்கு (வெளி. 21:19,20) வந்த சோதனைகள், பாடுகள், துன்புறுத்தல் களின் அனுபவங்களையும், ஒவ்வொரு குணநலத்திற் குரிய உருவகமான மாதத்தில் அது சோதிக்கப்படு வதையும் அடையாளப்படுத்துகிறது. இந்த பன்னிரண்டு குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வது சம்பந்த மாக உலகத்தாருக்கும் இவ்வித அனுபவங்கள் இருக்கும் (வெளி. 22:2).

72. இஸ்ரயேலர்கள் ஒரு வருட காலத்திற்கும் பாளயமிறங்கி இருந்தார்கள் என்று 22-ம் வசனம் குறிப் பிடுகிறது. சில சகித்தலின் அனுபவங்கள் சுவிசேஷ யுகம் (அநுக்கிரக வருஷம் – லூக். 4:19) முழுவதும் எல்லா காலங்களிலும் இருக்கும் என்ற உண்மையை அடை யாளப்படுத்தும். எடுத்துக்காட்டாக உலகத்தாரின் எதிர் ப்பு, தேவனுடைய பெயரளவிலான ஜனங்களின் எதிர்ப்பு, விசேஷமாக அக்கிரமத்தின் ரகசியத்தின் எதிர்ப்பு ஆகிய வைகள் யூத யுக அறுவடை காலத்தில் செயல்படத் தொடங்கி இந்நாள் வரை தொடர்ந்து நீடித்துக் கொண்டி ருக்கின்றன. இஸ்ரயேலர்கள் இந்தக் காலத்தில் பாளய மிறங்கி இருந்தார்கள் என்பது, நாம் இவ்வித சோதனை களில் முடிவு பரியந்தமும் நிலை நிற்க வேண்டும் என்ற பாடத்தை நமக்குப் போதிக்கிறது. மேலும் இவ்வித காலங்களில் அவர்கள் பிரயாணம் பண்ணவில்லை

என்பது, நாம் நம்முடைய பிரதிகூலமான அனுபவங்களை விட்டு ஓடி போகக் கூடாது என்ற பாடத்தை நமக்குப் போதிக்கிறது. நாம் அவ்வாறு செய்தால் தேவனுடைய ஜனங்களின் கூட்டத்தை விட்டு செல்கிறவர்களாக இருப் போம். நாம் இவ்வாறு செயல்படாமல், பிரதிகூலமான அனுபவங்களில் நிலைத்திருந்து, தேவனுடைய உதவி யோடு முடிவு பரியந்தமும் அவைகளை விசுவாச உண்மைத்துவத்துடன் எதிர்கொள்வோமாக.

73. எண்.9:23 கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின் படியே பிரயாணம்பண்ணுவார்கள்; கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவ லைக் காத்துக்கொள்வார்கள். எண்.9:23-ம் வசனமானது 18,19-ம் வசனங்களில் சொல்லப்பட்ட அறிக்கைகளைத் திரும்பக் கூறுகிறது. அதற்குக் கூடுதலாக, இந்த காரியங் கள் சம்பந்தப்பட்ட தேவனுடைய கட்டளைகள் மோசே யின் மூலம் அவராலே கொடுக்கப்பட்டன என்று குறிப் பிடுகிறது. இது பின்வரும் உண்மையை அடையாளப் படுத்துகிறது: நம்முடைய அபிவிருத்தி மற்றும் சகித்த லின் அனுபவங்கள் எல்லாவற்றையும் யாவே தேவன் கர்த்தராகிய யெஷுஆவின் மூலம் கட்டளையிடுவார். ஏனென்றால் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங் கள் எல்லாவற்றின் பொதுவான அம்சங்களையும், விவரங்களையும் விளக்குபவரும் செயல்படுத்துபவரும் நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவாகவே இருக்கிறார். பிதாவாலே சகலமும் உண்டாயிருக்கிறது, குமாரர் மூல மாய் சகலமும் உண்டாயிருக்கிறது (1கொரி. 8:6).

★★★★★★★★★★★★★★★★★★★★


பாரமடைந்திருப்பதால் வரும் ஆபத்து

PT# 462, Nov-Dec 1962, p.82

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும்
வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும்
பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில்
அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும்
எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற
அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்.
ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற
இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு
முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக
எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி
விழித்திருங்கள் என்றார்
(லூக். 21:34-36)

1. மிகுந்த எச்சரிப்பும், ஆழ்ந்த முக்கியத்துவ மும் வாய்ந்த இந்த வார்த்தைகளை நம்முடைய கர்த்தர் தமது சீஷர்களிடம் சொன்னார். அவர்களுடைய நன்மைக் காகக் கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருந்தா லும், இவ்வசனத்தில் அவர் குறிப்பிட்ட "அந்த நாள்" ஆகிய சுவிசேஷ யுக முடிவில் வரும் சோதனையான காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களின் நன்மைக்காகவும் இன்னும் விசேஷமாகச் சொல்லியிருந் தார். ஆகையால் இக்காலத்தில் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்த ஜனங்கள் இந்த வார்த்தைகளை எப்பொழுதுமே மனதில்கொண்டு, இமைப்பொழுதும் கூட அவைகளை மறந்துவிடாதிருப்பார்களாக.

2. இந்த தீர்க்கதரிசனத்தில் கர்த்தர் சொன்ன



காரியங்கள், இக்காலத்தில் அடுத்தடுத்ததாக விரைவாக நிகழ்ந்துகொண்டிருக்கிற சம்பவங்களின் மூலம் நிறை வேற்றப்பட்டுக்கொண்டு வருகிறதை நாம்காண்கிறோம். இது தேவனுடைய ஜனங்களின் மீட்பு [விடுதலை] சமீபமாயிருப்பதால் அவர்கள் நிமிர்ந்து பார்த்து, அவர் களுடைய தலைகளை உயர்த்தி, மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கவேண்டிய காலமாக இருக்கிறது. ஆனால் இக்காலத்தில் (வச. 34-ல் சொல்லப் பட்டபடி) சத்தியத்தினால் பிரகாசிப்பிக்கப்பட்ட பலர் ஏராளமான மற்ற காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதால், வரவிருக்கிற ராஜ்யத்திற்காகத் தங்க ளைத் தகுந்த விதத்தில் ஆயத்தம் செய்துகொள்ள இயலாதவர்களாக இருப்பதையும் நாம் கண்கிறோம். இதுவே இந்த தீர்க்கதரிசனம் உண்மையானது என்பதற் குரிய உறுதியான சான்றுகளில் ஒன்றாக இருக்கிறது. சத்தியத்தினால் பிரகாசிக்கப்பட்ட பல ஜனங்கள் எந்த அளவிற்குப் பாரமடைந்திருக்கிறார்கள் என்றால் (அழுத் தப்பட்டு, ஒடுக்கப்பட்டு- இந்த விஷயத்தில் "பார மடைந்து" என்பது மிகவும் பொருத்தமான வார்த்தையாக இருக்கிறது), நம்முடைய கர்த்தர் தாமே கொடுத்த இந்த கட்டளையின் எச்சரிப்புக்குச் செவி சாய்ப்பதற்கோ, அதி லிருந்து நன்மை பெறுவதற்கோ நேரமில்லாதவர்களாக இருக்கும் அளவிற்காகும்.

3. கர்த்தராகிய யெஷுஆவின் ராஜ்யத்தில் நித் தியத்திற்கும் ஜீவிக்க எதிர்பார்த்து, அவரை உண்மையாக நேசிப்பவர்கள், நம்முடைய காலங்கள் சம்பந்தமாக மத். 24, மாற்.13 மற்றும் லூக்.21-ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்ட கர்த்தருடைய பெரிய தீர்க்கதரிசனத்தில் விசேஷமாக ஆர்வம் கொள்வார்கள். எஜமானரை ஆழ மாக நேசிப்பவர்கள் நிச்சயமாக அவருக்குள் களிகூருவார் கள். ஏனென்றால் அவர் அவர்களுடைய ஆத்துமாக் களுக்குப் பிரியமானவராக இருக்கிறார். ஆகையால், எஜமானரின் இரண்டாம் வருகையின் காலத்தையும், அவர் ஏற்கனவே இந்த பூமிக்குத் திரும்ப வந்திருக்கிறார் என்பதையும், மனுஷர் காணக்கூடாத விதத்தில் இங்கே இருக்கிறார் என்பதையும் (1 தெச. 5:1-5; மத். 25:6; வெளி. 3:20), அவர் சாத்தானுடைய ராஜ்யத்தை அழித்துக்கொண் டும், தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டும் இருக்கிறார் என்பதையும் (வெளி. 2:26, 27; 11:15), ஆட்டுக் குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியின் முத்திரிக்கப்படுதலும், பூமிக்குரிய ஓட்டமும் முடிந்து, பரலோகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என் பதையும் (வெளி. 7:1-4; 19:7), சமாதானம் மற்றும் நீதியின் மகிமையான ஆட்சி விரைவில் பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்பதையும் உணரும்படிக்குப் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டவர்கள், தங்கள் மீட்பு [விடுதலை] சமீபமாயிருப்பதை நிச்சயமாக அறிந்து, நிமிர்ந்து பார்த்து,

தங்களுடைய தலைகளை உயர்த்துவார்கள். பூமியின் மேல் கிறிஸ்துவின் சமாதானமான மற்றும் நீதியான ஆளுகை துவங்கிவைக்கப்படுவதற்கு முன்பு, ஒரு விசேஷித்த சோதனை மற்றும் பரீட்சையின் காலம் இருக்கும் என்ற உண்மையானது (மல். 3:1-3; 1 கொரி. 3:10-15; எபே. 6:10-13; வெளி. 6:17), அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவையும் விழித்திருக்கச் செய்யும்.

4. இந்த காலத்திற்குரிய முக்கியமான அபாயங்கள் எவை? அவைகளில் பெரும்பான்மையானவை நம்மை வஞ்சிக்கக்கூடிய இயல்புடையவைகளாக இருக்கின்றன. மாற்கு 13-ல் "எச்சரிக்கையாயிருங்கள்!" என்று கர்த்தராகிய யெஷூஆ நான்கு முறை சொல்கிறார்: (1) ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (வச.5); (2)நீங்களோ (உங்களைக்குறித்து) எச்சரிக்கையாயிருங்கள் (KJV- take heed to yourselves)- நீங்கள் செய்கிற மற்றும் பேசுகிற காரியங்களைக் குறித்துக் கவனமாக இருங்கள் - ஏனெனில் சிலர் துரோகிகளாக இருந்து, உங்களுக்கு விரோதமாகச் செயல்படுவார்கள் (வச.9); (3)நான் உங்களுக்கு அறிவித்திருக்கிற காரியங்களைக் குறித்து நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள் (வச. 23); (4)எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் (வச. 33).

5. மத்.24, மாற்கு 13 மற்றும் லூக். 21-ம் அதிகாரங்களில் சொல்லப்பட்ட காரியங்களுக்கிடையில் பொதுவான ஒப்புமை இருந்தாலும், ஒவ்வொரு எழுத்தாளரும் சில குறிப்பான கருத்துக்களுக்கு மற்றவர்களைவிட அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இவ்வாறாக நம்முடைய பாட வசனத்தில் நம்மைக் குறித்து அதிக விளக்கமான கட்டளைகள் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்: "உங்கள் இருதயங்கள்... பாரமடையாதபடிக்கு ... எச்சரிக்கையாயிருங்கள்."

6. நம்முடைய இருதயங்களை விசேஷமாகப் பாரமாக்கக்கூடிய மூன்று காரியங்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன: பெருந்திண்டி, மதுபானத்தினால் வெறித்திருப்பது மற்றும் லவுகீக கவலைகள். முதலாம் மற்றும் இரண்டாம் காரியங்களினால் தங்களுக்கு அபாயம் இல்லை என்று சிலர் எண்ணக்கூடும். அது அவ்வாறு இருந்தால் நன்மையானது. அவர்கள் சொல்லர்த்தமான பெருந்திண்டியையும், வெறியையும் தவிர்க்கும் அதே நேரத்தில், ஏசா. 29:9-14-ம் வசனங்களில் சொல்லப்பட்ட வர்களில் அவர்கள் இல்லாதபடிக்கு எச்சரிக்கையாக இருப்பார்களாக. உலகரீதியான களியாட்டங்கள், நேரத்தை வீணாக்கும் இன்பங்கள் ஆகியவற்றில் ஈடுபடாதபடிக்கும், செல்வம், வியாபாரம், சமுதாய அந்தஸ்து, கலை, இசை, உடை, உலகரீதியான அறிவு முதலியவை சம்பந்தமாக உலகத்தனமான ஆவியினால் வெறிக்கொள்ளாதபடிக்கும் எச்சரிக்கையாக இருப்பார்களாக. விசேஷமாக இக்காலத்தில், இசை, உடை மற்றும் உலக ரீதியான அறிவு ஆகியவற்றினால் பலர் மிகவும் பாரமடைந்திருப்பதை உணருகிறார்கள். அதை மேற்கொள்ளவும் மிகவும் பிரயாசப்படுகிறார்கள். இன்னும் மற்ற அநேகர் அவைகளினால் "பாரமடைந்திருந்தாலும்," அதை முழுமையாக உணராதிருக்கிறார்கள்.

7. கர்த்தராகிய யெஷூஆ என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள். உங்களுக்கு அதிக உலக ரீதியான கவலைகள் இருக்கின்றன என்று மட்டுமே அவர் சொல்லாமல், உலகக்கவலைகளினால் "உங்கள் இருதயங்கள் பாரமடையாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொல்கிறார். ஒருவனுடைய கவனத்தைக் கோரும் தகுதியான உலகரீதியான பொறுப்புகள் அவனுக்கு அதிக அளவில் இருந்தாலும், அவனுடைய இருதயம் அதினால் அதிகமாகப் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடும். அவனுக்கு அதிக உலகரீதியான பொறுப்பு இருந்தாலும், அவனுடைய இருதயம் முற்றிலும் பாரமடையாமல் இருப்பதும் சாத்தியமானது. ஏன்? இந்த பொறுப்புகளில் அவனுடைய மனம் ஈடுபடும் அளவிற்கு அவனுடைய இருதயம் ஈடுபடுவதில்லை. அவன் சகலத்தையும் கர்த்தருக்கென்று செய்து, அவனுடைய கடமையாக இல்லாத உலகரீதியான பொறுப்பை ஏற்றுக்கொள்ளாததால், இவ்வுலக கவலைகளினால் அவனுடைய இருதயம் பாரமடையும் அபாயம் அதிகமாக இருக்காது.

சாத்தான் உபயோகிக்கும் முறைகள்

8. நம்முடைய இருதயங்கள் கர்த்தரோடு இல்லாதிருக்கும் போதிலும், நாம் அவரோடும், அவருடைய ஊழியத்தோடும் முழுமையாக ஒத்துணர்வு கொள்ளாதிருக்கும்போதும், அவரோடு இருக்கிறோம் என்றும், அவருடைய ஊழியத்தோடும் முழுமையாக ஒத்துணர்வு கொள்கிறோம் என்றும் எண்ணி நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாதபடிக்கு "எச்சரிக்கையாக இருப்பது" இக்காலத்தில் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. நாம் முறையாக அனுதினமும் கர்த்தரோடு ஐக்கியம் கொள்ளவும், அவருடைய வார்த்தையை உட்கொள்ளவும், அவருடைய ஆவியில் பங்குகொள்ளவும் நேரத்தை மீட்டுக்கொள்ள நம்மால் கூடாததாக இருந்தால், நம்முடைய இருதயம் அபாயமான நிலையில் இருக்கிறது. இது அவ்வாறு இருக்கும்போது, நம்முடைய இருதயங்கள் "பாரமடையும்" அளவிற்கு அவைகளின் மேல் சுமையைச் சுமத்த எதிராளியானவன் உபயோகிக்கிற முறைகள் எவை? நம்முடைய கர்த்தருக்குத் துரோகம் செய்யவோ, நாம் செய்த பொருத்தனைகளுக்கு விசுவாச உண்மைத்துவமில்லாமல் இருக்கவோ அவன் நம்மை நேரடியாகத் தூண்டுவதில்லை. நாம் விசுவாச உண்மைத்துவமில்லாது இருக்கவேண்டும் என்று அவன் ஒருபோதும் சொல்லமாட்டான்! ஆம்! நாம் அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்றும், ஆவியிலே அனலாயிருக்க வேண்டும் என்றும், (?)கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய வேண்டும் என்றும் அவன் ஊக்கப்படுத்தவும் செய்வான் (ரோம. 12:11). ஆனால் அவனுடைய கட்டளைகளின்படி, அவனுடைய முறைகளை உபயோகித்து ஊழியம் செய்ய வேண்டும் என்று அவன் விரும்புகிறான்! நாம் ரோம. 12:11-ம் வசனத்தை மறந்துவிட்டால், அவன் அதை நமக்கு எடுத்துரைப்பான், ஆனால் "கர்த்தருக்கு" என்ற பகுதியை அதிகமாக வலியுறுத்தாமல், அதின் முதல் பகுதியை அதிகமாக வலியுறுத்துவான்.

9. "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோ.5:8) என்றும் உங்கள் மனதில் பதியவைப்பான். சாத்தான் ஒரு தீவிரவாதி (காரியங்களைப் பலநேரம் மிகைப்படுத்திக் காண்பிப்பான்). வேதாகம வெளிச்சத்தின்படி, நீங்கள் உங்கள் வீட்டாரை விசாரிக்க வேண்டும் என்று சொல்லி, உங்கள் அயலகத்தானின் வீட்டைப் போலவே அல்லது அதைவிட சிறந்ததான ஒரு பெரிய, அழகான, நல்ல வீட்டை உங்கள் குடும்பத்தாருக்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உங்களை வலியுறுத்துவான். உங்கள் பிள்ளைகள் விரும்புகிற எல்லாவற்றையும் நீங்கள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் விரும்புகிற

வழியில் செல்ல அவர்களை விட்டுவிட வேண்டும் என்றும் சொல்லி அவன் உங்களை ஊக்குவிப்பான். அவர்கள் விரும்பினதைச் சொல்லவும், செய்யவும் அவர்களுக்குச் சுயாதீனம் இருக்கிறது என்றும், அதைத் தடுப்பது தவறானதாகும் என்றும் உங்களுக்குச் சொல்லுவான். உங்கள் குடும்பத்தார் விரும்புகிற எல்லாவற்றையும் வாங்கவும், அவர்களுடைய இருதய வாஞ்சைகளை எல்லாம் அவர்களுக்கு மிகுதியாக அளிக்கவும் உங்களை உழைக்கச் செய்ய அவன் நாடுவான். நீங்கள் உங்கள் குடும்பத்தாரை நன்றாகப் பராமரிக்கவில்லை என்று மற்றவர்கள் எண்ண இடங்கொடாதிருங்கள் என்ற யோசனையை உங்கள் மனதில் புகுத்துவான்!

10. சாத்தானால் கூடுமானால், உலகரீதியான வேலையை நம்மேல் மிக அதிகமாகத் திணித்து, அவை எல்லாம் நம்முடைய கடமைகள் என்று நமக்குச் சொல்லுவான். இந்த கோரிக்கைகள் மிக பெரிய எண்ணிக்கையில் இருப்பதால், அவைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு நமக்கு நேரம் போதாததாக இருக்கும். நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலையைச் செய்வதிலிருந்து நம்மைத் தடுப்பதற்காகவே அவன் இவைகள் எல்லாவற்றையும் திட்டமிடுகிறான். நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலை தேவ வார்த்தையைப் படித்து, தியானிப்பது என்பதாகும். அவ்வாறு தியானிப்பதின் மூலமாக மட்டுமே நாம் கிருபையிலும், சத்தியத்தை அறிகிற அறிவிலும் வளர திறன் அடைவோம். அதன் மூலமாக மட்டுமே நாம் சத்தியத்தைப் பரப்புவது உட்பட எந்த நற்கிரியையையும் செய்யத் தகுதியுள்ளவர்களாக ஆகுவோம். நாம் மிகவும் "பாரமடைந்த" நிலையில் இருந்தால், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேட" *(மத்.6:33)* மறந்து விடுகிறவர்களாக இருக்கிறோம் அல்லவா?

11. நம்முடைய இருதயங்கள் என்னும் பலிபீடத்தின் மேல் தேவனுடைய அன்பைக் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கச் செய்வதைவிட அதிக முக்கியமான வேலை வேறெதுவும் இல்லை என்பது வெளிப்படையாக இருக்கிறது. மேலும் அதைச் செய்வதற்குத் தேவனுடைய வார்த்தையைப் படித்துத் தியானிப்பது, விழித்திருத்தல் மற்றும் ஜெபம் என்பவைகள் உதவும் அளவிற்கு வேறெதுவும் உதவாது. நன்மையான மற்றும் தகுதியான கிரியைகளைச் செய்யாமல் இந்த மூன்று காரியங்களை மட்டுமே செய்ய வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இந்த மூன்று காரியங்களை செய்யாமல் நற்கிரியைகளை மட்டுமே செய்யக்கூடாது. அநேகர் வைராக்கியத்துடன் தேவனுக்கு ஊழியம் செய்தாலும், அறிவுக்கேற்ற வைராக்கியத்துடன் அதைச் செய்வதில்லை *(ரோம.10:2)*. சத்தியத்தின் மீதுள்ள அன்பானது, அதை இன்னும் அதிகமதிகமாகப் படிக்கவும், அதை இன்னும் அதிகமதிகமாக அப்பியாசிக்கவும், அதற்கு இன்னும் அதிகமதிகமாக ஊழியம் செய்யவும் நம்மை வழிநடத்தும். அது நம்மைச் சத்தியம் மற்றும் சத்தியத்தின் ஆவிக்குள் இன்னும் அதிகமதிகமாக வழிநடத்தும். நாம் நம்முடைய வியாபாரத்தின் பிரச்சனைகளுக்கும், உலகரீதியான செயல்பாடுகளுக்கும், கவலைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடாமல், தேவ வார்த்தையைப் படித்து தியானிப்பதற்கும், ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்வதற்கும் *(யோவா.4:24)* போதுமான நேரத்தைச் செலவிடும்படிக்கும் நம்மை வழிநடத்தும்.

12. ஜீவ அப்பத்தைப் புசிப்பதற்கு நாம் எவ்வளவு நேரம் செலவிட வேண்டும் என்று ஏதேனும் ஒரு சந்தேகம் நம் மனதில் தோன்றினால், நம்முடைய நேரத்தைக் கோருகிற உலகரீதியான கவலைகள் மற்றும் உலகத்தின் விருப்பங்கள் எல்லாவற்றையும் தராசின் ஒரு பக்கத்தில் வைத்து, மறு பக்கத்தில் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் *[உங்களுக்கு உண்மையாகத் தேவையானவைகள் எல்லாம்]* உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்ற வார்த்தைகளை வைப்போமாக. அவ்வாறு செய்யும்போது, சரியான, தேவனுக்குப் பிரியமான தீர்மானத்தை எடுக்க அது நமக்கு உதவும். நம்முடைய இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாத படிக்கு நாம் எச்சரிக்கையாக இருப்போமாக.

★★★★★★★★★★★★★★★★★★★★

"அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்"

BSQB p. 569, 570

யோவா.*10:9*-ம் வசனத்தில் "அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" என்று நம்முடைய கர்த்தர் சொன்ன போது அவர் எதை அர்த்தப்படுத்தினார்?

1. இந்த வசனத்தில் கர்த்தர் உபயோகித்த உருவகத்தை நாம் மனதில் கொள்ளும்போது, அதில் அவர் தெரிவிக்கிற கருத்து தெளிவாகும். அந்த உருவகம் இவ்வாறாக இருக்கிறது: ஒரு மேய்ப்பனானவன், இரவில் பதுங்கியிருக்கும் அபாயங்களிலிருந்து தன் ஆடுகளைப் பாதுகாப்பதற்கு அவைகளைத் தொழுவத்திற்குள் கொண்டுசெல்வான். பகலில் அவைகளை வெளியேயுள்ள புல்லுள்ள இடங்களுக்குக் கொண்டு செல்வான். தொழுவம் என்பது ஆடுகளுக்குப் பாதுகாப்பளிக்கும் இடமாக இருக்கிறது. அது தெய்வீகப் பரிபாலனத்தின் கீழ் இருக்கும் நிலையை மிகப்பொருத்தமாக அடையாளப்படுத்துகிறது. மேய்ப்பன் ஆடுகளைத் தொழுவத்திற்குள் நடத்திச் செல்வது என்பது, நம்முடைய மேய்ப்பராகிய கர்த்தராகிய யெஷூஆ, தேவனுடைய ஆடுகளாகிய நம்மைத் தெய்வீகப் பரிபாலனத்தின் ஆதரவு மற்றும் பாதுகாப்பிற்குள் நடத்துவதை மிக அழகாகச் சித்தரிக்கிறது. இவ்வாறாக நாம் "உள்ளே செல்கிறோம்." வேறு வார்த்தைகளில் சொன்னால், ஆடுகள் உள்ளே செல்வது என்பது, நாம் தெய்வீகப் பரிபாலனம் அளிக்கிற ஆதரவு மற்றும் பாதுகாப்பிற்குள் சென்று, அதில் பங்கு கொள்வதை அர்த்தப்படுத்தும். ஆகையால் உருவகத்தின் இந்த பகுதியானது தெய்வீகப் பரிபாலனத்தின் கீழ் இருக்கும் நிலையை அடையாளப்படுத்துகிறது.

2. இந்த வசனத்தின் மற்றொரு பகுதி, அதாவது "அவன் புறம்பே சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" என்பது தேவனுடைய ஆடுகளின் மற்றொரு விசேஷித்த சிலாக்கியத்தை அடையாளப்படுத்துகிறது. பாலஸ்தீன நாட்டின் மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளை மேய்ப்பதற்கு, பகலில் அவைகளைப் புல்லுள்ள இடங்களுக்குக் கொண்டு செல்வார்கள். நம்முடைய கர்த்தராகிய யெஷூஆ, தேவ வார்த்தையைப் புசிப்பது என்னும் மற்றொரு சிலாக்கியத்திற்குள் நம்மை எவ்வாறு கொண்டு செல்கிறார் என்பதை இது சித்தரிக்கிறது. தேவ வார்த்தை

என்னும் மேய்ச்சலில், நம்முடைய மேய்ப்பர் மிகுந்த புத்துணர்ச்சி அளிக்கும் சத்திய விருந்துகளுக்கு கொண்டு செல்கிறார்.

3. நாம் "உள்ளே சென்று" தெய்வீகப் பரிபாலனத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியும், "வெளியே சென்று" கிறிஸ்துவின் மூலம் தேவன் ஏராளமாக அளிக்கிற ஏற்ற வேளையின் ஆகாரமாகிய தேவ வார்த்தையைப் புசிக்கும்படிக்கும் செய்வதற்காக நாம் நமது கர்த்தரைப் போற்றித் துதிப்போமாக.

★★★★★★★★★★★★★★★★★★★★

அவள் வேதாகமத்தை மிக அதிகமாக அறிந்திருந்தாள்

BS# 343, Oct 1964, p. 79

1. பள்ளியில் மதரீதியான வகுப்புக்குச் செல்ல ஒரு குருமார் ஒரு சிறுமியிடம் சொன்னபோது, தன் தகப்பன் அதை விரும்புவதில்லை என்று சொல்லி மறுத்தாள். அவள் தன் தகப்பனுக்கு அல்லாமல், மதகுருமாருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் சொன்னார். "ஆனால், ஐயா, 'உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக' என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது" என்று பதிலளித்தாள். "ஆனால் நீ என்னைப் பிதா *(Father)* என்று அழைக்க வேண்டும்" என்று அவர் சொன்னார். அதற்கு அவள் இவ்வாறு பதிலளித்தாள், "இல்லை, 'பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்' என்று வேதாகமம் சொல்கிறது."

2. இவ்வளவு சிறிய பெண்ணுடன் மதரீதியான விவாதத்தில் தோல்வியடைய விரும்பாமல், "வேதாகமத்தைப் படிக்க உனக்கு உரிமை இல்லை" என்றார். "அப்படியானால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று யெஷூஆ ஏன் சொன்னார்?" என்று கேட்டாள். "அது குருமார்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட கட்டளை, ஒரு சிறுபிள்ளை வேதவசனங்களை அறிந்துகொள்ள முடியாது" என்று அவர் பதிலளித்தார். "பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவன் என்று பவுல் தீமோதேயுக்கு ஏன் எழுதினார்?" என்று அவள் கேட்டாள். இந்தச் சிறு பிள்ளையைத் தவறு என்று நிரூபிக்க ஏதேனும் ஒரு வழி இருக்க வேண்டும். அந்த மதகுருமார் இவ்வாறு சொன்னார், "தீமோத்தேயு சபையின் ஒரு கண்காணியாக இருப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டு, சபையின் அதிகாரிகளால் போதிக்கப்பட்டார். "இல்லை, ஐயா" என்று அந்த பெண் சொன்னாள், "தீமோதேயுவின் தாய் மற்றும் பாட்டி அவருக்குப் போதித்தார்கள் என்று பவுல் எழுதியிருக்கிறாரே." அந்த குருமார் அவளை விட்டுப்போனார். "சபைக் கூட்டம் முழுவதையும் கெடுக்கும் அளவிற்கு அவள் வேதாகமத்தை நன்றாக அறிந்திருக்கிறாள்" என்று அவர் முணுமுணுப்பதைக் கேட்டதாக ஒருவர் சொன்னார்.

★★★★★★★★★★★★★★★★★★★★

அவர் நடந்துபோகையில் நான் அவரைச் சந்தித்திருந்தால்...

PT 1974, p.30

அவர் கலிலேயாக் கடலோரமாய்
நடந்துபோகையில்,
நான் அவரைச் சந்தித்திருந்தால்,
அவர் நின்று, "என் பின்னே வா" என்று
என்னிடம் சொல்லியிருப்பாரோ என்று
நினைத்துப் பார்க்கிறேன்.

அதைக் குறித்து மேலும் சிந்திக்கையில்,
அவர் ஒருவேளை என்னை அழைத்திருந்தாலும்,
நான் செய்ய வேண்டிய இத்தனை காரியங்கள்
இருக்கையில்,
நான் யெஷூஆவுக்குக் பின்சென்றிருப்பேனோ
என்றும்
நினைத்துப் பார்க்கிறேன்.

★★★★★★★★★★★★★★★★★★★★



உங்கள் கவனத்திற்கு

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

புது உடன்படிக்கை

Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement
Website: www.mbtm.in